2013

# காதல் இல்லையேல் காதல்

தமிழ் புதினம்

மோகன் கிருட்டிணமூர்த்தி

|

## காதல் இல்லையேல் காதல் - 1

மத்திய கிழக்கு நாட்டில் வேலை செய்யும் மாப்பிள்ளை என்றவுடன் என் அப்பாவுக்கு கண்கள் அகலமாகியது. என் அம்மா அமெரிக்கா மாப்பிள்ளை கொண்டு வந்த மாதிரி குதிக்கிறீங்க என்று அப்பாவின் காலை வாரினார்.

சும்மா முட்டாள் மாதிரி பேசாதே (*அப்பாவுக்கு அம்மா என்ன பேசினாலும் முட்டாள்தனமாக தான் இருக்கும்*). அமெரிக்காவிலேர்ந்து நம்ம மகள் வந்துட்டுப்போக 24 மணி நேரம் ஆகும். நாம போய் பாக்கனும்னா ஆயுசுக்கு ஒரு தடவைதான் போய் வர முடியும். போனா வரமுடியாது. அங்க இருக்கவும் முடியாது. குளிரு தாங்காது. மிட்டல் ஈஸ்ட்டுனா அப்படியா. நாலு மணி நேரம் தான் பிளைட்டு. சங்கீதா சரவணபவன் எல்லாம் இருக்கு. நம்ம ஊரு மாதிரி. குறிப்பா வருமான வரி கிடையாது. அங்கு இருக்கறவங்க அமெரிக்காவை விட வசதியா இருக்காங்க தெரியுமா என்று ஊருமினார்.

என்னங்க ஏதோ துபாய் பக்கம் சொன்னீங்க இப்ப மிட்டல் ஈஸ்ட்டுன்னு சொல்றீங்க - அப்பாவித்தனம் மாறாத என் அம்மா.

முண்டம் முண்டம் மத்திய கிழக்கு தான் மிட்டல் ஈஸ்ட - என் அப்பா. நல்ல வேளை பெண்ணுரிமை கூட்டத்திற்கு என் அப்பாவின் வார்த்தைகள் கேட்டிருந்தால் இந்நேரம் என் வீட்டிற்கு முன் “டவுன், டவுன்” சத்தம் கேட்டிருக்கும்.

என்னமோ பண்ணுங்க. எனக்கு என் பொண்ணு கண் கலங்காம இருக்கனும் அவ்வளவு தான்.

உன் பொண்ணு ஷேக்கு பொண்டாட்டி மாதிரி இருப்பா கவலைபடாதே. அவ எனக்கும் மக தான் என்றார் என் அப்பா.

*ஓடையில தண்ணியில ஒரசிவிட்டேன் சந்தனத்தை சேந்திச்சோ சேரலையோ செவத்தன் மச்சான் கைகளிலே*.... பாட்டு ஓடிக்கொண்டிருந்தது. என்ன தான்

நாம் தமிழர்களாக இருந்தாலும் இந்த செவத்த தோலை பார்த்தால் மனம் மாறிவிடுகிறது. நிற வெறியர்கள் அல்லவா நாம். *கறுப்பு தான் எனக்கு பிடிச்ச கலரு* என்று சொல்பவர்கள் மிகவும் குறைவுதானே.

நல்ல நிறம். சுருட்டு முடி. சும்மா நச்சென்று இருந்தான் சாரி, இருந்தார், எதிர்கால கணவர் அல்லவா. போட்டோ பார்த்ததும் எனக்கு பிடித்திருந்தது. ஏதோ பெரிய இன்ஜினியராம். பெரிய நிறுவனத்தில் தினாரில் சம்பாதிக்கிறாராம். எப்போதா மஹிந்திரா சிட்டி அருகில் வில்லா வாங்கி போட்டுவிட்டாராம். எளிமையான மனிதராம். வரனை கொண்டு வந்த உறவுக்காரர் அடுக்கிக் கொண்டே இருந்தார். அப்போதே எனக்கு ஷேக்கின் பெண்டாட்டி ஆகிவிட்டதாக ஒரு பிரமை.

விடுமுறையில் வந்திருந்தார். பந்தாவே இல்லை. உறவுக்கார மாமா சொன்னது போல எளிமையாக இருந்தார். அழகாக பேசினார். இனிமையான குரல். ஆண்களுக்கு இனிமையான குரல் என்று சொல்வது சரியா. விடுங்க தமிழை திருத்தி பார்க்கும் நேரமா. கதையை கேளுங்க. தனியாக பேச வாய்ப்பு கிடைத்தது. என் பல தோழிகளுக்கு திருமணம் ஆகி குழந்தைகளும் உண்டு. 27 வயதில் நம் சமுதாய சிக்கலாக நான்.

எனக்கு வயசு 30 ஆச்சு பரவாயில்லையா என்றார் ஏதோ நான் அவரை வேண்டாம் என்று சொல்லிவிடுவேனோ என்ற பயத்தில். நானோ பரக்கவாவெட்டி மாதிரி கல்யாணம் ஆனால் பரவாயில்லை என்று உட்கார்ந்திருந்தேன்.

எனக்கும் 27 ஆச்சே. அது பிரச்சனை இல்லை. இத்தனை ஸ்மார்டா இருக்கீங்க (*அவர் சிவந்த முகம் மேலும் சிவந்தது*). கை நிறையா சம்பாதிக்கிறீங்க. நீங்க ஏன் லேட்டு என்றேன் சுற்றி வளைக்காமல்.

வாழ்கை முழுசுமா வாடகை வீட்டில் இருந்தோம் நாங்க. அப்பா எங்க குடும்பத்துக்கு உழைச்சி ஓடானவர். என் அக்காவுக்கு கல்யாணம் ஆன பிறகு

சொந்தமா ஒரு வீடும் காரும் வாங்கின பிறகு தான் கல்யாணம் அப்படின்னு முடிவுக்கு வந்தேன். குறிப்பா கடன் ஏதும் இல்லாத பிறகு தான் கல்யாணம். ஆஃப் கோர்ஸ் ஹனிமூனுக்கும் பணம் சேர்த்து வைச்சிட்டேன் என்றார் மெல்லியமாக கண்ணடித்த படியே. அதுவே பெரிய காதல் சைகை என்று நினைத்தாரோ என்னவோ. அவர் பதில் எனக்கு திருப்தியாக இருந்தது. ஆனாலும் நானும் நேர்மையின் சின்னம் அல்லவா.

எனக்கு ஏன் லேட்டுன்னு கேட்கலையா நீங்க என்றேன்.

இது பாருங்க மதுமிதா. உங்களுக்கு கல்யாணம் ஆகலை. எனக்கு முன்னாடி உட்கார்ந்திருக்கீங்க. எதுக்கு ஆகலைன்னு நான் பேசி உங்க பழைய கதை கிளர்றது எனக்கு விருப்பம் இல்லை என்றார் அமைதியாக.

முதல் பந்தில் சிக்ஸர் அடித்த மாதிரி இருந்தது எனக்கு. அவருடைய குணம் மிகவும் பிடித்துவிட்டது எனக்கு.

என்ன படிச்சிருக்கீங்க என்றார்.

எம் எஸ் சி ஐடி என்றேன் அடக்கமாக.

மன்னிக்கனும் ஏற்கனவே உங்க பயோ டேட்டா படிச்சிட்டேன். இருந்தாலும் என்ன பேசறதுன்னு தெரியலை என்றார் அப்பாவித்தனமாக.

இரண்டாவது பந்திலும் சிக்ஸர்.

ஹா ஹா. பரவாயில்லை. நீங்க எதுவேண்டுமானாலும் கேட்கலாம் என்றேன். எனக்கு அப்போதே திருமணம் செய்துக் கொண்டு அவருடன் சென்ற விடவேண்டும் போல் இருந்தது.

எனக்கு ஒரே ஒரு விஷயம் தான் கேட்கனும். இன்னும் 4-5 வருஷம் நான் பஹ்ரைனில் இருப்பேன். ஆனா திரும்பி மெட்ராஸ் தான். உங்களுக்கு வெளி நாட்டிலேயே இருக்கனும்னு ஆசையா என்றார்.

அப்படி ஒன்றும் இல்லை என்றேன் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று.

அப்புறம் திரும்பி வந்தா என் அப்பா அம்மா கூடவே இருப்பாங்க பரவாயில்லையா.

அட நம்ம கூட இருக்காம வேற எங்கே இருப்பாங்க என்றேன். பிறகு நம்ம கூட என்று சொன்னதை நினைத்து குட்டிக் கொண்டேன்.

நிஜமாவா. உங்களுக்கு தனி குடித்தனம் பண்ணனும் கட்டாயம் இல்லையே என்றார்.

எனக்கு ஒரு பிரச்சனையும் இல்லை என்றேன். இத்தனை நாள் அப்பா அம்மாவோட தானே இருந்தேன். உங்க அப்பா அம்மாவையும் என் அப்பா அம்மா மாதிரி நினைச்சிக்கறேன். இப்போது நான் முதல் பந்தில் சிக்ஸர் அடித்தேன். அப்படித்தான் அவரு நினைத்தார் போலிருந்தது.

எனக்கு உங்களை பிடிச்சிருக்கு. உங்களுக்கு என்று கேட்டார்.

கண்களை மூடி திறந்து சம்மதம் என்று சொன்னேன்.

அவரும் திருப்தியுடன் எழுந்தார்.

## 2

திருமணம் சிறப்பாக நடந்தது என்று சொன்னால் மிகவும் குறைந்துவிடும். வரதட்சனை வேண்டாம் என்றதும் என் அம்மா அப்பா தலைகால் புரியாமல் குதித்தார்கள். அதற்காக சேர்த்து வைத்த பணம் அத்தனையும் திருமண செலவில். இரண்டு வீட்டாரும் வீடியோ. இரண்டு வீட்டாரும் போட்டோ ஆல்பம். இரண்டு முறை ரிசெப்ஷன். ஒன்று உள்ளூரில் ஒன்று பஹ்ரைனில். கேட்டதை விட ஆண்டவன் அதிகமாக அள்ளிக் கொடுத்திருந்தார்.

திருமணம் பதிவு செய்து, என் பாஸ்போர்டில் அவர் பெயர் என்டார்ஸ் செய்து விசா எடுத்து அவருடனே அழைத்து சென்றார். என்னுடைய சகி துபாயில் திருமணம் புரிந்து சென்றபோது பல மாதங்களுக்கு பிறகு தான் கணவருடன் சேர்ந்தாள்.  என் கணவனின் திட்டமிடுதலை கண்டு மெச்சினேன்.

அவர் நிறுவனம் கொடுத்திருந்த வீடு. ஃபுல்லி ஃபர்னீஷ்ட். அழகாக இருந்தது. வீட்டிற்கு தேவையான அனைத்தும் இருந்தது. டப்பர்வேர் டப்பாக்கள் முழுவதும் வீட்டு மளிகை சாமான்களை வாங்கி வைத்திருந்தார். அனைத்திலும் து பருப்பு பா பருப்பு என்று ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதி வைத்திருந்தார். வாங்கிய பொருட்களின் எக்ஸ்பெயரி தேதியையும் எழுதி வைத்திருந்தார். இத்தனை ஆர்கனைஸ்டா என்று வியந்தேன்.

ஊருக்கு வந்த நான்கு வாரத்தில் பஹ்ரைன் முழுவதும் பார்த்த அனுபவம். சிறிய ஊர். சுமார் பண்ணிரண்டு லட்சம் மக்கள் தொகை. மேப்பில் தேடியும் கிடைக்காத ஒரு ஊர். வரைபடத்தில் ஒரு புள்ளி மாத்திரம். சீஃப் மால், தானா மால், பஹ்ரைன் மால், சிட்டி சென்டர், மெரீனா மால், அந்த ஊரின் கோட்டைகள் என்று அனைத்தும் பார்த்துவிட்டோம். விரைவில் அருகில் இருக்கும் தீவுகளுக்கும் அழைத்து செல்வதாக சொன்னார். அவருக்கு அதிகம் பேசி பழக்கம் இல்லை போலும். சிறிய பதில்கள். எனக்கு பெரிய குறையாக தெரியவில்லை. தாமதமாக திருமணம் ஆனாலும் நல்ல இடத்தில் தான் ஆகியிருந்தது என்று திருப்தி.

அவர் நேரிடையாக என்னிடம் சொல்ல கூச்சப்படும் விஷயங்களை சிறிய காகிததில் எழுதி வைப்பார் நாளை சாக்ஸ் துவைத்து வைக்க முடியுமா என்றோ இன்று என்னால் உடல் உறவு கொள்ள முடியாது என்றோ எழுதி வைத்துவிடுவார். எனக்கு இந்த பழக்கம் வியப்பாக இருந்தது. இன்னும் எத்தனை காலங்களுக்கு பிறகு என்னிடம் சகஜமாக பழகுவாரோ என்றும் தோன்றியது.

அடுத்த மாதம் லண்டனில் ஹனிமூன் என்று கூறியிருந்தார். அந்த கனவில் மிதந்து கொண்டிருந்த நான் இந்த சிறிய விஷயங்களை கண்டுக் கொள்ள வில்லை. ஆள் ராஜா மாதிரி இருந்தாலும் அந்த விஷயங்களில் சற்று மண்டு தான். என்னுடைய உணர்வுகளின் துவக்கம் அவருடைய உணர்வுகளின் இறுதியாக இருக்கும். நல்ல மனிதர். புகைபிடிக்கும் பழக்கம் இல்லை. குடி பழக்கம் இல்லை. குறிப்பாக பொய் சொல்லும் பழக்கம் இல்லை. சக பெண் ஊழியர்கள் தொலைபேசியில் அழைத்தாலும் என்ன பேசினேன் என்று கூறிவிடுவார். பெண் நண்பர்களின் பெயரை ஆண்களின் பெயர்களாக பதிவு செய்துக் கொள்ளும் கட்டாயம் இல்லை அவருக்கு. என்னுடைய தொலைபேசியை ஒரு நாளும் அவர் தொட்டதில்லை. நான் யாரிடம் பேசினேன் என்று கேட்டதில்லை. எதற்கு பேசினேன் என்றும் கேட்டதில்லை.

ஊரைவிட்டு வந்ததாலோ வந்த ஊரில் யாரும் பழக்கம் இல்லாததாலோ நான் மணி கணக்கில் இணையத்தில் நேரம் செலவிடுவேன். பேஸ்புக் கூகிள் அரட்டை இதை விட்டால் என் ஐபோன் 4ல் வாட்ஸ் ஆப்பில் அரட்டை. சில சமயம் என் ஆண் நண்பர்கள் என்னுடன் சென்னையில் பணி புரிந்தவர்கள் என்னை அழைத்து பேசினாலும் என்ன விஷயம் என்று நானாக சொன்னால் தான் உண்டு. ஜென்டில்மேன். சில சமயம் ரொம்ப ஜென்டிலோ என்று நொந்துக் கொள்வேன். நான் பூ மாதிரி மென்மையானவள் தான். ஆனாலும் நீ கசக்கினால் எனக்கு இன்பம் தான் என்று சொல்லத் தோன்றும். ஆனால் பச்சையாக பேசுகிறேனோ என்று நினைத்து அடக்கிக் கொள்வேன்.

ஒரு இனிமையான வாழ்கைக்கு எல்லாம் இருந்தும் ஒரு சிறிய கசப்பு மற்ற நல்லவைகளை கெடுத்துவிடுகிறது. பாலில் விஷம் விழுந்தது போல. பரவாயில்லை அவர் தாமதமாக திருமணம் செய்துக் கொண்டதும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று விட்டுவிடுவேன். இதைப் பற்றி எப்படி பேசுவது. பெண்களுக்கான மன்றங்களில் மக்கள் சொன்ன எல்லா வகை உண்ர்ச்சி தூண்டும் உணவு வகைகளை சமைத்து போட்டாகிவிட்டது. பலன் ஒன்றும் இல்லை.

## 3

லண்டன். ரம்மியமான ஊரு. ஓடிக்கொண்டிருக்கும் மக்கள். ஒரு சிறிய பெண்ணின் குதுகலத்துடன் அனைத்தும் ரசித்தேன். கேட்டதை எல்லாம் வாங்கி கொடுத்தார். அப்பா அம்மா அனுமதிக்காத ஆடைகளையும் கூட அணிந்த மகிழ்ந்தேன் தடையில்லாமல். ஆனால் ஹனிமூனில் ஹனி மிஸ்ஸிங்க தான். ஓடி நடந்து களைத்த பிறகு உறக்கம் தான்.

அனைத்து புகைப்படங்களையும் பேஸ்புக்கில் ஏற்றினேன். பர்பெக்ட கப்பிள், அழகான ஜோடி, கடவுள் அமைத்து வைத்த ஜோடி என்றெல்லாம் நண்பர்கள் பாராட்டி தள்ளினர். சிலருக்கு நாங்கள் லண்டன் சென்று வந்த எரிச்சல் அவர்களுடைய பின்னூட்டங்களில் நன்றாக தெரிந்தது. எனக்கே கண் பட்டுவிடும் அளவிற்கு சில புகைப்படங்கள் நன்றாக வந்திருந்தன. அவருடைய புகைப்படம் எடுக்கும் திறமையும் அவருடைய டிஎஸ்எல்ஆர் கேமிராவின் தொழில்நுட்பமும் என்னை ஒரு சலாம் போடவைத்து. நானே இத்தனை அழகா நான் என்று கேட்டுக் கொண்டேன்.

ஊருக்கு திரும்பினோம். மெதுவாக எனக்கு திருமண வாழ்கையில் நான் சந்தோஷமாக இருக்கிறேனா எனும் கேள்வி எழ ஆரம்பித்தது. காலையில் எழுந்து அவருக்கு பிரேக்பாஸ்ட். பிறகு மதியம் வீடு வந்துவிடுவார். ஒன்றிலிருந்து மூன்று வரை. இந்த ஊர் வழக்கமாம். அனைவரும் மதிய உணவிற்கு வீடு சென்றுவிடுவார்கள். சிறிய ஊர் தானே. எங்கும் பத்து நிமிடங்களில் சென்றுவிடலாம். மூன்று மணிக்கு அவர் எழுந்ததும் ஒரு காபி. பிறகு மீண்டும் அலுவலகம். ஆறு ஆறரை மணிக்கு வந்துவிடுவார். அவருடைய பெரிய காரில் ஊர் சுற்றுவோம். சில நேரம் சங்கீதா சரவணபவனில் இரவு உண்டுவிட்டு திரும்புவோம். இல்லாவிட்டால் வீட்டில் சமையல். வாரம் ஒரு முறை ஷாப்பிங்க் எனும் பெயிரில் வீட்டு மளிகை காய்கறி பால் பழம். இது சற்றே சலிப்பு தட்ட ஆரம்பித்திருந்தது. தானா மாலில் லுலூ சூப்பர்மார்கெட். என்னை கண் கட்டி விட்டால் கூட ட்ராலியை எடுத்து ஷாப்பிங்க செய்துவிடுவேன். அந்த அளவிற்கு எதை எங்கு வைத்திருக்கிறார்கள் என்று மனப்பாடம். ஒரு சில நாட்கள் அவர் மிகவும்

பிஸியாக இருந்தால் என்னை மட்டும் இறக்கிவிட்டு சென்றுவிடுவார். இரண்டு-மூன்று மணி நேரம் கழித்து வந்து அழைத்துச் செல்வார். இது போன்ற நேரங்களில் சற்றே மன அமைதி கிடைத்தது எனக்கு. தனிமையே மேல் எனும் அளவிற்கு ஆகிவிட்டது. அந்த நேரங்களிலும் நான் வாட்ஸ்ஆப்பில் அரட்டை. சில ஆண் நண்பர்கள் சற்றே எல்லைகளை மீறி என் அந்தரங்க வாழ்கையை பற்றி கமெண்ட் அடிப்பார்கள். டேய் வரம்பு மீறாதே என்று நான் பதில் எழுதினாலும் அந்தரங்கங்களை பகிர்ந்துக் கொள்வேன். அது எனக்கு பிடித்திருந்தது. சரியா தவறா என்று தெரியவில்லை. பெண் நண்பர்களை விட ஆண் நண்பர்களுடன் இணையத்தில் அதிக நேரம் செலவிட்டேன்.

## 4

அன்று ஒரு இனிமையான சம்பவம் நடந்தது. அன்றும் என்னை சூப்பர் மார்கெட்டில் இறக்கிவிட்டு என் கணவர் சென்றுவிட்டார். நான் கடையில் நுழைவதற்கு முன்பாக என்னை நோக்கி ஒரு ஸ்மார்டான இளைஞன் வந்தான். இளைஞனா. ஹா. எனக்கும் அதிக வயதில்லையே. திருமணம் ஆனதும் நான் ஏன் என்னை கிழவியாக நினைத்துக் கொள்ள வேண்டும்.

மேடம் நீங்க இண்டியா என்றான்.

என்னுடயை கல்லூரி நாட்களுக்கு சென்றேன். ஹா என்னை பார்த்தா அரபு நாட்டுக்காரி மாதிரி தெரியுதா என்றேன் துடிப்புடன்.

ஹா ஹா இல்லை மேடம். மன்னிக்கனும். நாங்க ஒரு சர்வே செய்யறோம். உங்க பெயர் போன் இமெயில் எதுவும் கொடுக்க வேண்டாம். ஜஸ்ட் இதில் உள்ள விஷயங்களுக்கு பதில் தந்தால் போதும் என்றான்.

ஒரு அன்னியனுடன் பேசுவது எனக்கு ஆறுதலாக இருந்தது. என் கணவரின் ஆண் நண்பர்கள் வீட்டுக்கு வந்தாலும் அவர்களுடன் பேசுவதில் அதிக ஆர்வம் இல்லை எனக்கு. அவருடயை நண்பர்கள் அவர்களைவிட சில வருடங்கள் பெரியவர்களாகவே இருந்தார்கள். என்னுடன் மிகவும் குறைவாக பேசுபவர் அவர்கள் வந்தால் பெரும்பாலும் அவரே பேசிக் கொண்டிருப்பார். அவர்களும் அவர் பேசுவதை ரசித்துக் கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

படிப்பு - எம் எஸ் சி ஐடி என்று நிரப்பினேன் அந்த பக்கத்தில். மேலும் உணவு உடை என்று ரசனை சம்பந்தப்பட்ட சில கேள்விகள். அனைத்திற்கும் பதில் எழுதினேன்

அவன் நிறைவு செய்த தாளை எடுத்துக் கொண்டு கண்களை ஓட விட்டான். ஹா மேடம் நீங்க எம் எஸ் சி ஐடியா. பலே. நீங்கள் பஹ்ரைனில் வேலை செய்யறீங்களா என்று கேட்டான்.

இல்லை என்றேன். அப்போது தான் சென்னையில் பல ஆண்டுகள் நானும் வேலை செய்தேன் என்ற எண்ணமே வந்து சென்றது.

உங்களுக்கு வேலை செய்ய விருப்பமா என்று கேட்டான்

ம்ம். தெரியவில்லை. என் கணவரை கேட்க வேண்டும் என்றேன்.

அவரு எங்கே வேலை செய்யறாரு என்றான்.

அவர் வேலை செய்யும் நிறுவனத்தின் பெயரை சொன்னேன்.

ஓ அந்த கம்பெனியா. பெரிய சம்பளம். அப்புறம் எதுக்கு நீங்க வேலை செய்யப்போறீங்க என்றான்.

இல்லை. அப்படி இல்லை. எனக்கும் போர் அடிக்குது. நான் அவர்கிட்டே பேசி சொல்றேன் என்றேன்.

இந்தாங்க என் விசிட்டிங்க் கார்ட். உங்க புருஷன் அனுமதி தந்தார்னா எனக்கு உங்க சிவியை அனுப்புங்க. ஐடிலே வேலை காலி இருக்கு என்றான்.

நான் ஏதோ யோசனையுடன் வாங்கிக் கொண்டேன்.

பை தாங்க்யூ என்று சொல்லி விடை பெற்றான்.

இன்னும் அவனுடன் சிறிது நேரம் பேசியிருக்கலாம் என்று தோன்றியது. கணவருடைய மிஸ்ட் கால் வந்தது. ட்ராலியை தள்ளிக் கொண்டு கீழே இறங்கி பார்க்கிங்கிற்கு சென்றேன்.

என்ன ஷாப்பிங்க ஆச்சா என்றார். வழக்கமாக கேட்கும் கேள்வி தான்.

ஆச்சு என்று சொன்னேன். என்னுடைய குரலில் வழக்கமான தோய்வு இல்லை. சற்றே உற்சாகம் இருந்தது. அவர் கண்டுக் கொண்டாரா என்று தெரியவில்லை.

என்னங்க எனக்கு வீட்ல போர் அடிக்குது. இப்ப ஒருத்தரை பார்த்தேன். சர்வே பண்ண வந்தாரு. அவங்க கம்பெனியிலே வேலை இருக்காம். நான் போகட்டுமா என்று எதிர்பார்ப்புடன் கேட்டேன்.

அவரும் அந்த விசிட்டிங்க் கார்டை வாங்கி பார்தவாரே, நல்ல கம்பெனி தான். சிட்ராவுல இருக்கு. நம்ம வீட்டுலேர்ந்து கொஞ்சம் தூரம் தான். உனக்கு இஷ்டம் இருந்தா தாரளமா வேலைக்கு போ. சீக்கிரமா நீ டிரைவிங்கும் கத்துக்கனும் என்றார். என்ன அருமையான மனிதர்.

அவர் கைகளுக்குள் என் கையைவிட்டு அணைத்துக் கொண்டேன்.

ஹேய் இது ரோடு என்றார்.

என்னுடைய பெரும்பான்மையான ரோமான்டிக் சைகைகளுக்கு அவரிடமிருந்து பதிலே வராது. அது எனக்கு தெரிந்தது தான். ஆனாலும் நான் அவரை அணைத்ததற்கு காரணம் என் சுதந்திர பத்திரத்தில் அவர்

கையெழுத்து இட்டது மாதிரி இருந்தது அவர் நான் வேலைக்கு செல்வதற்கு அனுமதி தந்தது.

மதிய உணவிற்கு பிறகு அவர் அலுவலகம் செல்ல நான் அவசரமாக கணினியை துவக்கி அந்த இளைஞன் - கிரிதர் மின்னஞ்சலுக்கு என் பயோ டேட்டாவை அனுப்பினேன். பிறகு ஏதோ எண்ணத்தில் கூகிள் சாட் அரட்டை மென்பொருளை துவக்கி வைத்துவிட்டு அதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். இடையில் பல பேர் பேச முயன்றும் யாருக்கும் பதில் அளிக்காமல் கணினித்திரையை வெறித்த வண்ணம் இருந்தேன். பத்தே நிமிடத்தில் கிரிதர் ஜிமெயில் உங்களுடன் சாட் செய்ய விரும்புகிறார் என்று திரையில் தோன்றியது. வெற்றி களிப்புடனும் சற்றே நடுக்கத்துடனும் சாட் செய்ய விருப்பம் என்று தட்டினேன். நான் செய்வது சரியா தவறா என்று தெரியவில்லை. ஆனாலும் உள்ளுக்குள் சுகமாக இருந்தது.

ஹாய் மதுமிதா உங்க சிவி கிடைச்சுது.

ஓ அப்படியா என்றேன்.

என்ன ஆன்லைனில் எப்போதும் இருக்கீங்களா

இல்லை. இப்ப தான் கணவர் ஆபீஸ் போனார். போரடிக்குது. அதனால தான் இன்டெர்நெட்டில்.

ஓ. சரிதான். நான் இப்போ என்ன பண்றேன் தெரியுமா என்று கேட்டான்.

ம்ம். தெரியலையே.

உங்க சிவியை பிரண்ட் எடுத்தேன்.

சரி.

கையில வைச்சிருக்கேன். என்னுடைய விரல் உங்கள் அழகான பெயரை தொட்டுக் கொண்டிருக்கிறது என்றான்.

நான் தக்கென்று எழுந்தேன். உடல் நடுங்கியது. ஏதோ எதிர்பார்த்திருந்தது தானே. என் கணவர் உணர்ச்சிபூர்வமாக மெல்லிய அழகான வார்த்தைகளை என்னிடம் கடைசியாக எப்போது பேசினார் என்று யோசித்து பார்த்து களைத்தேன். எப்போதும் சம்பிரதாய வார்த்தைகள் தான். அதிலும் காதல் குறைவு தான். இருந்தும் சுதாரித்துக் கொண்டு,

என்ன ஐஸா என்றேன்.

இல்லை. நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க. உங்க பேரும் அழகா இருக்கு. உங்க சிவியை படித்த பிறகு நீங்க புத்திசாலி அப்படின்னும் தெரிஞ்சிக்கிட்டேன்.

இந்த ஸ்மைலியை ஏன் கணினி துறையினர் கண்டுபிடித்தார்களோ என்று நினைத்தேன் அப்போது. நாக்கை நீட்டுவது மாதிரியும் கண் அடிப்பது மாதிரியும் ஸ்மைலிகளை நடுநடுவே போட்டு தாக்கிக் கொண்டிருந்தான் அவன்.

ஒன்னு தெரியுமா என்று கேட்டான்.

என்ன என்றேன் நானும் என் பங்கிற்கு அப்பாவி ஸ்மைலிகளை போட்டுக் குவித்து.

நீங்க என்னை விட நாலு வயசு பெரியவங்க என்றான்.

சற்றே எனக்கு ஏமாற்றமாக இருந்தது. நான் என்ன எனக்கு வரன் பார்க்கிறேனா என்று நினைத்துக் கொண்டேன்.

ஹா ஹா. அப்படியா என்று கேட்டு வைத்தேன்.

ஆமாம். ஓஹோ. என் காபினுக்குள் ஒருவர் வந்துவிட்டார். பிறகு பேசுகிறேன் என்று சொல்லி சட்டென்று சாட்டிலிருந்து வெளியேறினான்.

எனக்கு அவமானமாக இருந்தது. ஏமாற்றமாக இருந்தது. அழுகையாக வந்தது. இன்னும் சிறிது நேரம் அவனிடம் பேசிக் கொண்டிருந்திருக்கலாம். ஆனால் பின் மண்டையிலிருந்து வேண்டாம் வேண்டாம் என்ற சத்தமும் என்னை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது. நான் என்ன அவனிடம் உறவா வைத்துக் கொண்டிருக்கிறேன். சும்மா சாட் செய்தால் என்ன பெரிய தப்பு என்று சொல்லிக் கொண்டேன்.

என் மொபைல் எண்ணும் என் சிவியில் இருந்தது நினைவிற்கு வந்தது. அவனுடை விசிட்டிங்க் கார்டை பார்த்து அவனுடைய எண்ணை பதிவு செய்துக் கொண்டேன். வாட்ஸ் ஆப் திறந்தவுடனேயே அவனிடமிருந்து ஒரு சாரி பிறகு பார்க்கலாம் என்ற செய்தி வந்திருந்தது. சற்றே ஆறதலானேன்.

## 5

இரண்டு நாட்கள் அவனிடமிருந்து ஒரு தகவலும் இல்லை. ஆன்லைனில் அவனுக்காக காத்திருந்தது தான் மிச்சம். செல்பேசியிலும் செய்தி இல்லை. நானாக அவனை அழைக்கவும் சங்கடமாக இருந்தது.

மற்ற பழைய நண்பர்களுடன் பேசுவதிலும் நாட்டம் இல்லை.

மூன்றாவது நாள் பத்து மணிக்கு அவனிடமிருந்து அழைப்பு வந்தது செல்பேசியில். நான் அவனை எதிர்பார்த்து காத்திருந்ததாக காட்டிக் கொள்ளாமல் எந்த கிரிதர் என்றேன்.

ஹா அதுக்குள்ள மறந்துட்டீங்களா. அன்று லுலூ சூப்பர் மார்கெட்டில் பார்த்தோமே என்றான்.

ஓ. சாரி. பெயர் மனதில் பதிவாகவில்லை என்று பொய் சொன்னேன். என்ன விஷயம் என்று கேட்டேன்.

நான் உங்க வீட்டுப்பக்கமாக தான் ஒரு வேலை விஷயமா வந்திருக்கேன். ஒரு சூப்பர் தமிழ் காபி கிடைக்குமா என்று கேட்டான்.

நான் நடுக்கத்துடன் அவர் வீட்ல இல்லை என்று இழுத்தேன்.

ஹா திங்கட்கிழமை பத்து மணிக்கு வீட்ல இருக்கனும்னா என்னை மாதிரி வேலை வெட்டி இல்லாம் சுத்தற மார்கெட்டிங்க வேலையில தான் இருக்கனும் உங்க புருஷன். பயப்படாதீங்க நான் உங்களை கடிச்சி குதறமாட்டேன் என்றான் சிரித்துக் கொண்டே.

கடிச்சித்தான் பாரேன் என்று மனதில் சொல்லிக் கொண்டேன். என கணவர் ஒரு அலார்ம் கிளாக். திடீரென்று எந்நாளும் வீட்டிற்கு வந்ததில்லை. சரி வாங்க என்றேன்.

ஐந்து நிமிடத்தில் வீட்டின் அழைப்பு மணி ஒலித்தது. நைட்டியிலிருந்து சுடிதாருக்கு மாறிவிட்டு சென்று கதவை திறந்தேன். வாங்க என்று அழைத்து சோபவை காட்டினேன். உள்ளுக்குள் ஜூரமே வந்திருந்தது எனக்கு. கணவரில்லாத போது முதன் முறையாக ஒரு ஆண் மகன்.

இரண்டே நிமிடத்தில் காபி வைத்து கொண்டு வந்து மேசை மேல் வைத்தேன்.

வீடு உங்களை மாதிரியே அழாக வைச்சிருக்கீங்க என்றான். மீண்டும் ஒரு பாராட்டு. பெண்களுக்கு ஏன் பாராட்டு என்றால் அப்படி ஒரு மோகம். எதற்கு அடி போடுகிறான் என்று நினைத்தேன். இன்னும் பயந்தேன்.

எப்ப இண்டர்வ்யூக்கு கூப்பிட போறாங்க உங்க கம்பெனிலே. எங்க கணவர் அனுமதி கொடுத்திட்டார் என்றேன்.

ஓ அது நான் எச் ஆருக்கு கொடுத்திட்டேன். இன்னும் ஒரு வாரத்திலே கூப்பிடுவாங்க. இங்க எல்லாமே ஸ்லோ தான் என்றான். பிறகு சில விஷயங்கள் பேசிக் கொண்டிருந்தோம். காபியை அவன் தொட்ட பாடில்லை.

என்ன சவுத் இண்டியன் காபி வேணும்னு சொல்லிட்டு காபி சாப்பிடவே இல்லை நீங்க என்றேன்.

காபி சாப்பிட்டிட்டு முத்தம் கொடுத்தா கசக்குமா என்றான் என் கண்களை ஆழமாக பார்த்தப்படியே. அது எப்படி திருமணமாகியும் காதல் வாழ்கையில்

திருப்தியில்லாத பெண்களை இந்த திருமணமாகாத இளைஞர்கள் கண்டு பிடிக்கிறார்களோ என்று வியந்தேன். ஆனால் அதை காட்டிக் கொள்ளாமல், என்ன பேசறீங்க என்றேன் சற்றே கோபமாக.

அவன் நான் சற்றும் எதிர்பாராத விதமாக எழுந்து என் அருகில் வந்து என்னை பிடித்து நிறுத்தி வைத்து என்னை இறுக அணைத்துக் கொண்டான். என் உடலில் மின்சாரம் பாய்ந்து சென்றது. அவனை தள்ளிவிட்டு என் தலை முடியை சரி செய்துக் கொண்டே என்ன கிரிதர் இது. இவ்வளவு சீப்பா பிஹேவ் பண்றீங்க. நான் கல்யாணம் ஆனவ என்றேன்.

அவன் அமைதியாக சென்று சோபாவில் மீண்டும் அமர்ந்தான். என்னை பாக்கறதுக்கு முன்னாடி ஏன் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க என்றான் சகஜமாக.

நான் அவனை வீட்டை விட்டு அனுப்பி என்னுடைய புதிய உறவை இழக்க விரும்பவில்லை. அவனும் அதை அறிந்திருந்தான் போலும்.

ஏன் என்னை கல்யாணத்திற்கு முன்னாடி பாத்திருந்தா மட்டும் என்னவாம். நீங்களே என்னைவிட நாலு வயசு சின்னவன்னு சொல்றீங்க என்றான்.

அதுக்குதான் என் அம்மா அப்பாவை திட்டனும்னு தோனுது என்றான் இளித்துக் கொண்டே.

நானும் சற்றே சிரித்து வைத்தேன். மீண்டும் எழுந்து வந்து என் கைகளை பிடித்துக் கொண்டான். நான் இந்த முறை விடுவிக்கவில்லை. இதெல்லாம் ரொம்ப வேகமா நடக்குது கிரிதர் என்றேன். அவன் பிடிப்பு வேண்டும் போல் இருந்தது. அதற்கு மேல் அவனை அனுமதிக்க என் கலாச்சாரமோ நான் வளர்ந்த வளர்ப்போ அனுமதிக்க வில்லை. ஆச்சர்யமாக அவனும் அதற்கு

மேல் எதுவும் செய்ய முயல வில்லை. அப்படியே என் சோபாவில் ஒண்டிக் கொண்டு அமரந்தான்.

கால் மணி நேரம் நாங்கள் எதுவும் பேசிவில்லை. எங்கோ கிணற்றிலிருந்து பேசுவது போல நீங்க போங்க கிரிதர் அவர் வர நேரம் என்றேன். என் நெற்றியில் முத்தம் இட்டுவிட்டு அகன்றான். தடுக்க கூட என்னால் முடியாமல் அமர்ந்திருந்தேன். எத்தனை நேரம் என்று தெரியிவில்லை.

என்ன கதவு திறந்தே இருக்கு என்று சொல்லிக் கொண்டே என் கணவர் உள்ளே வரும் வரை. அவருக்கு பதில் அளிக்கமால் மதிய உணவை எடுத்து மேசையில் வைத்தேன்.

அவர் சென்றதும் கதவை சாத்திவிட்டு நைட்டியில் மாறி என் படுக்கை அறைக்குள் நுழைந்தேன். கிரிதர் எடாக்கூடமாக என்னிடம் விளையாடினான் - தற்போதைக்கு என் எண்ணங்களில் மட்டும். என்னுள் பெரிய மனப்போராட்டமே நடந்துக் கொண்டிருந்தது. தவறு தவறு என்று கன்னத்தில் யாரோ அறைவிடுவது போல் இருந்தது. அதையும் மீறி என் குரல் என்ன தவறு. என்னை முழுவதும் திருப்தி செய்யாமல் இருப்பது என் கணவனின் தவறு இல்லையா. என்னுடைய உடலின் தேவைகளை நிறைவேற்றும் கடமை அவனுக்கு இல்லையா. வெறும் சாப்பிட்டு ஊர் சுற்றிவிட்டு தூங்குவது தான் திருமண வாழ்கையா. இல்லை சமையல் செய்து துணி துவைத்து வீடு சுத்தம் செய்யத்தான் போட்டோ ஆல்பங்களும் வீடியோக்களும் அம்மி மிதிப்புக்களும் அருந்ததி பார்ப்புக்களுமோ என்று கேள்விக் கனைகளை யாரிடமோ தொடுத்துக் கொண்டிருந்தேன்.

## 6

மீண்டும் சில நாட்கள் கிரிதரிடமிருந்து மௌனம். நானே வெட்கத்தை விட்டு ஹாய் என்று ஒரு குறுந்தகவல் எஸ்எம்எஸ் அனுப்பினேன்.

அவனிடமிருந்து நீங்கள் கோபமாக இருக்கிறீர்களா என்று பதில் வந்தது.

இல்லை. ஆனா நீங்க ஏன் அப்படி அன்னிக்கு நடந்துகிட்டீங்க.

தெரியலை. எனக்கு உங்களை ரொம்ப பிடிச்சிருக்கு.

எனக்கு கல்யாணம் ஆகிட்டது தெரியும் இல்லையா உங்களுக்கு.

தெரியும். அது என் புத்திக்கு தெரியுது. ஆனா இதயதுக்கு இல்லை.

நம் உறவு சமுதாயதிற்கு தப்பு தெரியுமா என்று அனுப்பினேன்.

ஐயே நீங்க என்ன இப்படில்லாம் பேசறீங்க. உங்களுக்கு விருப்பம் இல்லைன்னா நாம இத்தோட நிறுத்திக்குவோம் என்று பதில் கொடுத்தான்.

எனக்கு தக்கென்றது. இல்லை. நாம நல்ல நண்பர்களா மட்டும் இருப்போம் என்றேன்.

சரி என்றான். நாளைக்கு இன்டர்வ்யூ. உங்க ஹஸ்பென்ட் டிராப் பண்ணுவாரா இல்லை நான் வரட்டுமா என்று கேட்டான்.

ஐயோ வேண்டாம். என் புருஷனே டிராப் செய்வார். எத்தனை மணிக்கு என்றேன்.

9 மணிக்கு.

சரி நாளைக்கு வரேன். பார்ப்போம் என்று முடித்தேன்.

மறுநாள் காலை எழுந்து சிற்றுண்டி செய்து முடித்து கிளம்பினேன். வழி முழுவதும் இன்டர்வ்யூவில் என்ன பேச வேண்டும் எப்படி பேச வேண்டும் என்று சொல்லிக் கொண்டு வந்தார் என் கணவர். அதென்ன கணவன் என்று ஆனதும் இந்த அட்வைஸ் கொடுக்கும் புத்தி ஆண்களுக்கு வந்துவிடுகிறது. இதெற்கு முன்பு நான் நேர்முக கானல்களுக்கு போனதில்லையா வேலை செய்தததது இல்லையா. அவர் பேசியது எதுவும் என் காதில் விழவில்லை. எனக்கு கிரிதரை காணப்போகும் படபடப்பு இருந்தது.

என்னை அந்த நிறுவனத்தின் எதிரே இறக்கிவிட்டு நான் இங்கே 30 நிமிஷம் காத்திருக்கேன். அதுக்கு மேலே லேட்டாச்சின்னா எனக்கு போன் பண்ணு நான் ஆபீஸ் போயிட்டு அப்புறம் வந்து உன்னை பிக்அப் பண்ணிக்கறேன் என்றார்.

நான் சரி என்று ஈன ஸ்வரத்தில் சொல்லிவிட்டு உள்ளே நுழைந்தேன். அந்த வரவேற்பாளரிடம் மிஸ்டர் கிரிதர் மார்கெட்டிங் என்று சொன்னேன். அவர் என்னை நீளமான அறை ஒன்றை கடந்து ஓரமாக இருந்த ஒரு காபினுக்கு வெளியே விட்டுச் சென்றார். மெதுவாக கதவை தட்டி உள்ளே நுழைந்தேன்.

நான் உள்ளே நுழைந்ததும் சட்டென்று என் பின்னால் வந்து என்னை இறுக அணைத்தான் கிரிதர். பிறகு மெதுவாக கதவின் புறம் சாய்ந்துக் கொண்டு என்னை இழுத்து அணைத்து இறுக முத்தமிட்டான் என் இதழ்களில். என்ன இது என்ன இது இது ஆபீஸ் என்றேன் பததட்டத்துடன். வெளியே கணவர்

காத்திருக்கிறார். பல பேர் வெளியே வேலை செய்துக் கொண்டிருக்கிறார்கள்-- இது எனக்கு பிடித்திருந்தது. ஆனால் இந்த சூழலில் எதிர்பார்க்காத ஒன்று.

தாங்ஸ் என்றான்.

எதுக்கு என்றேன் காட்டமாக.

என் முத்தத்தை ஏத்துக்கிட்டதுக்கு.

நான் ஒன்னும் ஏத்துக்கலை. கத்தினா உங்க பெயர் கெட்டுப்போயிடுமேன்னு சும்மா இருந்தேன்.

உங்களுக்கு பிடிக்கலையா என்று நேரிடையாக கேட்டான்.

சிறிது நேரம் அமைதியானேன். கிரிதர், எனக்கு உங்களை பிடிச்சிருக்கு. நீங்க செய்யற இந்த சில்மிஷம் பிடிச்சிருக்கு. ஆனா இது தப்பு. என்னோட ஹஸ்பென்ட் வெளிய காத்திருக்காரு. நீங்க இன்டர்வ்யூன்னு பொய் சொல்லி என்னை வரவழைச்சி இப்படி பண்றீங்க என்றேன் பதட்டத்துடன்.

மதுமிதா எனக்கு உங்க மேலே பைத்தியம். நிஜமாவே இன்டர்வ்யூ ஏற்பாடு பண்ணியிருக்கேன். நீங்க போயிட்டு வாங்க. வீட்டுக்கு போவதற்கு முன்னாடி என்னை மறுபடியும் பாத்துட்டு போங்க என்றான்.

பிறகு என்னை அழைத்துக் கொண்டு இன்னும் இருவரை சந்திக்க வைத்துவிட்டு அவன் தன்னுடைய அறைக்கு திரும்பினான். 7 வருடம் கணினி துறையில் அனுபவம் எனக்கு. அவர்கள் ஏதிர்பார்த்ததோ 2-3 வருடம் அனுபவம் உள்ளவர்களை. அனைத்து கேள்விகளுக்கும் சரியாக பதில் சொன்னேன்.

நீங்க ரொம்ப அனுபவசாலி. இந்த வேலை அவ்வளவு கடினமாக இருக்காது உங்களுக்கு. சம்பளமும் அவ்வளவு தரமுடியாது பரவாயில்லையா என்று கேட்டார் மனித வள மேலாளர்.

சார், நான் ஹவுஸ் வைஃப். வீட்ல போர் அடிக்குது. படிச்சது வீணா போகக்கூடாதுன்னுதான் வேலைக்கு வரேன் என்றேன்.

ஓ அப்படியா நல்லது. உங்களுக்கு 250 தினார் சம்பளம். ஆபீஸ் கார் உங்களை காலையில பிக் பண்றதுக்கும் சாயங்காலம் டிராப் பண்றதுக்கும் வரும். அந்த கார் உங்களுக்கு மட்டுமல்ல. இன்னும் சில பேருக்கும் சேர்த்து தான். உங்களுக்கு விசா தர முடியாது. இப்போதைக்கு உங்க கணவர் விசாலத்தான் இருக்கனும். ஆறு மாசம் போச்சின்னா உங்களுக்கு 350 தினார் கொடுத்து விசாவும் தரோம். சரியா என்றார்.

சரி என்றேன்.

சரி நாங்க மேலதிகாரிக்கு அப்ரூவலுக்கு அனுப்பறோம். அப்புறமா உங்களுக்கு தகவல் சொல்றோம். நன்றி என்றார்.

நானும் நன்றி என்று சொல்லிவிட்டு கிரிதரின் அறைக்குச் சென்றேன். *தீ பிடிக்க தீ பிடிக்க முத்தம் கொடுடா* என்று சொல்லிக் கொண்டே நுழைந்தேன். என் எதிர்பார்ப்பு வீணாக வில்லை. உள்ளே நுழைந்ததும் காட்டுத்தனமா என்னை கட்டி அணைத்தான். இனிமேல் தினமும் இந்த முத்தம் கிடைக்கும் என்று சொல்லி அணைத்தான். நான் என்னை விடுவித்துக் கொண்டு ஒப்பனை அறைக்கு சென்ற முகம் சரி செய்துக் கொண்டு கணவரின் காரில் ஏறினேன்.

என்ன இன்டர்வ்யூ ரொம்ப டஃப்பா. இப்படி உடம்புலேர்ந்து ரத்தம் போன மாதிரி வரே. வேலை கிடைக்கலேன்னா பரவாயில்லை. இது ஜஸ்ட் டைம் பாஸ் தான் என்று சொல்லிக் கொண்டே என் கைபிடித்தார். என்ன உடம்பு கொதிக்குது. டேக் இட் இஸி என்றார்.

இல்லை. இன்டர்வ்யூ நல்லாத்தான் பண்ணேன். வேலையும் ஆஃப்ர் பண்ணியிருக்காங்க. என்னிலேர்ந்து வரனும் அப்புறம் சொல்வாங்க என்றேன். குரல் நடுங்கிக் கொண்டிருந்தது. உடலும் தான்.

ஹேய். குட் நியூஸ் அப்புறம் ஏன் இந்த நெர்வஸ்னஸ்.

இல்லை உடம்பு சரியில்லை காலையிலேர்ந்து என்றேன்.

ஓஹோ மத்தியானம் ஒரு கொலீக்கை லஞ்சுக்கு அழைச்சிகிட்டு வரலாம் என்று நினைத்தேன் என்று சொன்னார்.

யாரு என்று கேட்டவாறே அவருடைய கிழ நண்பர்கள் ஒவ்வொருவர் பெயராக சொன்னேன்.

இல்லை இல்லை இது சுரேஷ் அன்னிக்கு நம்ம ரிசப்ஷனுக்கு வந்திருந்தார் என்று பதில் அளித்தார்.

எனக்கு சுத்தமாக நினைவுக்கு வரவில்லை. பல பேரை சந்தித்தேன் அன்று. சம்பிரதாயமாக சிரித்து வைத்ததோடு சரி. அனைவரும் கேட்ட கேள்வி பஹ்ரைன் பிடிச்சிருக்கா என்று. ஏதோ பிடிக்கவில்லை என்று சொன்னால் சில விஷயங்களை அவர்களால் மாற்றித் தரமுடியும் என்பது போல. எனக்கு வெளி ஆட்களை பார்க்கும் வாய்ப்பை விட மனமில்லை. இல்லை

பரவாயில்லை வரச் சொல்லுங்க. அரை மணிக்குள்ள சமைச்சிடறேன் என்றேன்.

தாங்கஸ் என்று சொன்னது என் அழகான மண்டு.

## 7

வந்தவர் என் கணவரின் ஒத்த வயதுடையவர். கலகலப்பாக பேசினார். எனக்கு சற்றே மாற்றமாகவும் இருந்தது. என் கணவரின் மேல் ஆதிக்கம் செலுத்தவது போல் இருந்தது. பல விஷயங்களில் என் கணவரே அவரிடம் அபிப்பராயம் கேட்டுக் கொண்டிருந்தார்.

என்னுடைய அனைத்து சமையல் வகைகளையும் பாராட்டினார். ஒவ்வொன்றுக்கும் மருத்துவ பலன்களையும் எந்த கடையில் வாங்கினால் சரியான இந்திய காய்கறி கிடைக்கும் எப்போது வாங்க வேண்டும் எது சீசன் என்ற சகல தலைப்புகளிலும் பேசினார்.

இன்னிக்கு தான் ஒரு இன்டர்வ்யூ போயிட்டு வந்தாங்க. சிட்ராவில் வேலை. ஆஃபர் கிடைச்சிடுத்து என்றார் என் கணவர். எப்போதுமே என்னை பிறர் முன் வாங்க போங்க என்று தான் குறிப்பிடுவார். இன்னொரு சிக்ஸர். யாருக்கு வேண்டும். அவுட்டானால் பரவாயில்லை.

ஓ நீங்க வேலைக்கு போக விருப்பம் இருக்கறதா உங்க கணவர் சொல்லவே இல்லையே. இங்கேயே மனாமாவில் வாங்கி கொடுத்திருப்பேனே. அவ்வளவு தூரம் எதுக்கு என்றார்.

ஓ அப்படியா ஏதாவது இருந்தா சொல்லுங்களேன் என்றார் என் கணவர்.

ஷூர். உங்க நம்பர் கொடுங்க என்று கேட்டார்.

நான் என் கணவரை பார்த்தேன். கொடுக்கலாம் என்பது போல கண் அசைத்தார்.

அவருடைய எண்ணுக்கு ஒரு மிஸ்ட் கால் கொடுத்தேன்.

பிறகு இருவரும் அலுவலகம் புறப்பட்டனர். அசந்து போய் தூங்கினேன் நான். சுமார் 4.30 மணிக்கு விழிப்பு வந்தது. விழிப்புடன் கிரிதர் காலையில் செய்த லீலைகளும் நினைவிற்கு வந்ததது.

இவனை எப்படியாவது வெட்டி விட வேண்டும். இது ஆபத்தான உறவு. கணவனிடம் இருக்கும் குறைகளை அவரிடம் பேசி சரி செய்யலாம். இன்னொரு ஆணை வாழ்வில் வரவிட்டால் ஆபத்து தான். இது நல்லதில்லை. யாரிடமாவது உதவி கேட்க வேண்டும். யாரிடம் கேட்பது என்று தெரியாமல் தவித்தேன்.

இன்று வந்த சுரஷிடம் கேட்டால் என்ன என்று தோன்றியது. சே ஒரு முறை தான் அவரை சந்தித்தோம். அதற்குள் கணவன்-மனைவி உறவுக்குள் இருக்கும் பிரச்சனைகளை பற்றி எப்படி பேசுவது. பேசினால் என்ன. வேண்டாம் அவர் போய் என் கணவரிடம் ஏதாவது உளறினால் பிரச்சனையாகிவிடும். ஆனால் அவர் போய் என் கணவரிடம் பேசினால் தான் பிரச்சனை முடிவுக்கு வரும் அல்லவா. ஒரே குழப்பமாக இருந்தது.

என் கணவருக்கு ஒரு வாய்ப்பு தர வேண்டும் என்று தோன்றியது. எல்லாம் நல்ல படியாக நடந்தால் கிரிதரும் வேண்டாம் வேறு எவனும் வேண்டாம் என்று தோன்றியது.

மூன்று நாட்கள் இந்த போராட்டத்தில் சென்றது. இடையில் கிரிதர் தொடர்பு கொள்ள முயன்றும் அதை தவிர்த்தேன்.

அன்று வியாழன். ஒன்பது மணிக்கு ஏதோ தீர்க்கமாக முடிவு செய்துக் கொண்டு சுரேஷூக்கு ஒரு அழைப்பு விடுத்தேன். உங்க கிட்டே பேசனும் என்றேன்.

என்ன சொல்லுங்க மதுமிதா என்றான் சுரேஷ் மிகவும் பழக்கப்பட்டது போல்.

இல்லை போன்ல வேண்டாம். நேராக என்றேன்.

அதுக்கு என்ன இன்னிக்கே உங்க கணவரோட மதியம் சாப்பாட்டு வந்திடறேன். நான் போர்ஸ்ட பேச்சுலர். குடும்பம் ஊர்ல தான இருக்காங்க. எங்கே ஓசி சாப்பாடு கிடைச்சாலும் ஒக்கே தான் என்றான் நகைச்சுவையா என் பிரச்சனை தெரியாமல்.

இல்லை நாம சந்திக்கிறது என் கணவருக்கு தெரியக்கூடாது என்றேன்.

சற்றே அவனும் சீரியஸாக என்ன ஏதாவது பிரச்சனையா என்று கேட்டான்.

நேர்ல தான் சொல்ல முடியும்.

சரி நான் உங்களை 11 மணிக்கு பிக் அ்ப் பண்ணிக்கிறேன். மறுபடியும் 12 மணிக்கு உங்களை வீட்ல விட்டுடறேன் என்றான்.

சரி என்றேன்.

சொன்னது போல வீட்டுக்கு கீழே வந்து மிஸ்ட் கால் கொடுத்தான். நானும் என் கட்டிடத்து வாட்ச் மேன் பார்க்கிறானா என்று நோட்டம் விட்டப்படியே சுரேஷின் காரில் ஏறினேன்.

ஸ்டார் பக்ஸ் போலாமா என்று கேட்டான்.

வேண்டாம் என்றேன். பொது இடம் வேண்டாம் என்றேன்.

ஓ அப்படியா. பரவாயில்லை. என் ரூம் இங்கே மஹூஸில் தான் இருக்கு. உங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால்.... என்று இழுத்தான்.

சரி என்றேன்.

சிறிய ஒரு பெட்ரூம் வீடு. எல்லாம் வைத்த இடத்தில் வைத்தது போல் இருந்தது. சமையலறை கூட அதிகம் பயன்படுத்தாத மாதிரி இருந்தது.

காபி சாப்பிடறீங்களா

சரி என்று சொன்னேன்.

காபி கொடுத்துவிட்டு சொல்லுங்க மதுமிதா என்ன பிரச்சனை என்று கேட்டான்.

மிகவும் யோசித்தேன். சொல்லலாமா வேண்டாமா என்று.

என்ன விஷயமாக இருந்தாலும் தைரியமா சொல்லுங்க. உங்களுக்கு எனக்கு நடுவுல மட்டும் இருக்கும் என்றான் ஆறுதலாக.

இல்லை சுரஷ் எப்படி சொல்றதுன்னு தெரியலை. உங்க நண்பர் அற்புதமான மனிதர். அழகாக இருக்கிறார். வசதியான வாழ்கை கொடுத்திருக்கார். நிறைய பணம் காசு சேர்த்து வைத்திருக்கிறார். என் பெற்றோர்களை மரியாதையாக நடத்துகிறார். என்னை ஒரு நாளும் கடிந்துக் கொண்டதில்லை. மொத்தத்தில்

எந்த ஒரு பெண்ணும் விரும்பும் அனைத்து குணங்களும் அவரிடம் இருக்கிறது.

ஆம். ஆபீஸிலும் அவருக்கு மிக நல்ல பெயர். அவரை வெறுக்கும் மனிதர்களே இல்லை. அவர் யாரிடமும் சண்டை போட்டதில்லை என்றான்.

ஆனா என் வாழ்கை இயந்திர வாழ்கை மாதிரி ஆகிவிட்டது. காதல் இல்லை. காமமும் இல்லை. உடல் உறவு இருந்தாலும் அதில் திருப்தியில்லை. அவரிடம் சில குறைகள். அதை எப்படி நான் பேசறது என்று தெரியவில்லை. இதை சொல்லும் பக்குவம் எனக்கு இருக்கான்னும் தெரியவில்லை. ஒரே குழப்பமாக இருக்கும்.

மிகவும் யோசித்து கிரிதர் விஷயத்தை மறைத்துவிட்டிருந்தேன்.

நான் சந்தோஷமா இல்லை சுரேஷ். அவரால சில நிமிடங்கள் கூட நீடிக்க முடியலை. உறவு வச்சிக்கறதே ஆடிக்கு ஒரு முறை அமாவாசைக்கு ஒரு முறை. அதுவும் சில நிமிடங்கள் தான். நானா விரும்பும் நாட்கள் ஒன்றும் கிடைப்பதில்லை. அவராக விருப்பப்பட்டு வந்தால் தான் உண்டு. அதிலும் திருப்தியில்லை.

பிறகு சில நிமிடங்கள் அமைதியாக இருந்தது. அவன் நான் சற்றும் எதிர்பாராத விதமாக என் அருகில் வந்தான். சட்டென்று என்னை அணைக்க முயன்றான். இது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. கிரிதரிடமிருந்து தப்பிக்க தானே இவன் உதவி நாடினோம். இன்னொரு கிரிதரா.  அவனை சட்டென்று தள்ளிவிட்டேன்.

என்ன சுரேஷ். உங்களை நல்ல நண்பராக நினைச்சித் தானே நான் உதவி கேட்டு வந்தேன். நான் என்ன காமத்தில் அலையும் பிசாசுன்னு நினைச்சீங்களா. உங்க கிட்டே உடல் உறவை எதிர்பார்த்து வந்தேன்னு

நினைச்சீங்களா. ஏன் இவ்வளவு கேவலமா நடந்துக்கிட்டீங்க என்று கத்தி விட்டு வெளியேறினேன்.

மிகவும் வளர்ந்த நாடு பஹ்ரைன். ஆனால் போக்குவரத்து தான் முன்னேறவில்லை. தேவையும் இல்லை. அனைவரிடமும் கார் இருந்தது. தெருவில் நின்றிருந்தேன். தெருவுக்கே வந்துவிட்டேனோ என்று எண்ணம் வந்தது. ரேடியோ டாக்ஸிக்கு போன் போட்டு காத்திருந்தேன். வெயில் வெளியே சுட்டது. என் கணவரின் நண்பர் என்னிடம் நடந்துக் கொண்ட விதம் உள்ளே சுட்டது.  சே ஏன் இந்த ஆண்கள் இப்படி இருக்கிறார்கள். பெண்களை வெறும் காமப் பொருளாக ஏன் நினைக்கிறார்கள். அவர்களுக்கு மனம் உண்டு அதில் தேவைகள் உண்டு என்று ஏன் நினைப்பதில்லை.

இந்த சமுதாயத்தை நினைத்து வெறுப்பாக வந்தது. சவரம் செய்யும் பிளேடானாலும் சரி ஆண்களின் உள்ளாடை விளம்பரமானாலம் சரி இவர்களுக்கு பாதி உடை காட்டிக் கொண்டு திரையில் பெண்கள் வரவேண்டும்.  திரைப்படங்களில் கடைசியில் வில்லனிடம் மாட்டிக் கொள்ள வேண்டும். ஆடைகள் கிழிபடவேண்டும். பாட்டு என்றால் குளிர் தேசமானாலும் கதாநாயகன் முழுவதுமாக ஆடை அணிந்துக் கொள்ள கதாநாயகி மாத்திரம் 6 அங்குல மினிஸ்கர்டில் ஆட வேண்டும்.

ஏன். ஏன்  ஆண்களை மாத்திரம் குறை சொல்ல வேண்டும். பெண்கள் சம்மதித்தால் தானே இது போன்ற திரைப்படங்களும் விளம்பரங்களும் வெளி வருகின்றன.

எனக்கு அவமானம் தாங்கவில்லை. என் புத்திசாலித்தனத்தின் மீது எனக்கு சந்தேகம் வந்தது. போயும் போயும் இந்த சுரேஷையா தேர்ந்தெடுக்க வேண்டும் உதவி கேட்க.

45 நிமிடங்கள் பிறகு அந்த ரேடியோ டாக்ஸி வந்தது. 100 பில்ஸ் அதாவது சுமார் 15 ரூபாய் ஒரு லிட்டர் பெட்ரோல் கிடைக்கும் இந்த பூமியில்

அநியாயமாக 600 ரூபாய் கொடுத்து 5 நிமிட தூரத்தில் இருக்கும் என் வீட்டிற்கு வந்த சேர்ந்தேன்.

நேராக போய் குளியலைறையில் ஷவரை திறந்து வைத்து நின்றேன். ஏதோ ஷவரிலிருந்து கங்கை வருவது போலவும் என் பாவங்கள் கழுவி விடுவது போலவும் ஒரு எண்ணம். இன்று நான் எந்த பாவமும் செய்ய வில்லை. பாவம் கழுவ முயன்றேன். சுரேஷ் தான் பாவி நான் இல்லை. நான் வருந்தத்தேவையில்லை என்று சொல்லிக் கொண்டேன்.

எனக்கு பிடித்த உணவு வகைகளை சமைத்து மேசையின் மேல் அடுக்கினேன். அலார்ம் கிளாக் சரியாக வந்தது. சாப்பிட்டு பிறகு தூங்கியது. காபி குடித்துவிட்டு மீண்டும் சென்றது.

## 8

பெண்களுக்கு பாலியல் கல்வி அவர்களின் தாயார் மூலம் கிடைத்துவிடுகிறது. முட்டாளாகிவிடுவது ஆண்கள் மட்டும். எந்த ஒரு தந்தையும் மகனிடம் இதைப்பற்றி பேசுவதில்லை நம் சமுதாயத்தில். ஆண்களாக தெரிந்துக் கொள்ளும் விஷயங்கள் தவறானா மூலங்களிலிருந்து. மட்ட ரகமான திரைப்படங்களிலிருந்தோ பிட்டு படங்களிலிருந்தோ அல்லது மஞ்ச பத்திரிக்கை மூலமாக தான் இவர்கள் கற்பது. தொழில் நுட்பம் வளர்ந்த பிறகு இணையத்தில் கிடைக்கும் இலவச படங்கள்.

இந்த முறையற்ற கல்வி அவனுடைய வாழ்கைக்கு மிகவும் ஆபத்தாகவே முடிகிறது. ஒளி படங்களில் காண்பது போல் அவனுடைய உடல் அமைப்பும் இருப்பதில்லை. அதில் வரும் பெண்களைப் போல அவன் வாழ்கை துணைவியும் அமைவதில்லை பெரும்பாலும். ஆக சராசரி வாழ்கை ஒவ்வாத ஒரு விஷயத்தை கற்று நிழலை நிஜத்தில் தேடுகிறோம் நாம். இவ்வாறான சூழலில் அந்தரங்கம் அசிங்கமாகிவிடுகிறது.

ஒரு பெண் பல நிலைகளை தாண்டி வருகிறாள். உடல் அமைப்பு, வாழ்கை முறை, அழகு இவையும் அந்த நிலைகளை கடந்து வருகிறது. பெரும்பாலோனோர் திருமணத்திற்கு பிறகு உடலை கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்வதில் கவனம் செலுத்துவதில்லை. குழந்தை பிறப்பு யுவதியை கிழவியாக்கிவிடுகிறது. உடல் பருமனடைகிறாள். பிறகு கணவனை விட வயதானவளாக காணத் துவங்குகிறாள். கணவன் அவளுடனே இன்னும் பல ஆண்டுகாலம் உடன் வரவேண்டும். நல்ல கணவர் உடலையும் மீறி உள்ளத்தை நேசிக்க துவங்குவர். மனைவி என்ற உருவகத்தை நேசிப்பர். சிலரோ உடலை மட்டும் கண்டு கண்களை அங்கும் இங்கும் அலைய வைப்பர்.

வெற்றிகரமான குடும்ப வாழ்கைக்கு உடலும் உள்ளமும் சேர்ந்து உறவாட வேண்டும். கணவனின் எதிர்பார்ப்புகளை மனைவி நிறைவேற்ற சிரமம்

எடுத்துக் கொள்வதும், மனைவியின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு கணவன் நடந்துக் கொள்வதும் தான் வாழ்கையை இனிமையாக்குகிறது. இதில் ஒருவர் இன்னொருவரை *டேங்கிங்க் ஃபார் கிராண்டெட்* என்று சொல்வார்களே அதுபோல சகஜமாக எடுத்துக் கொண்டால் உறவில் பிரிவு தொடங்குகிறது.

மதுமிதாவும் தன் வாழ்கையில் இந்த குழப்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்தாள். சில நேரம் வாழ்கையில் எல்லாம் கிடைத்துவிட்டாலும் அலுப்பு தட்டி வேறொன்று தேட துவங்குகிறது மனம். உண்ண உணவு உடுத்த உடை சராசரி தேவைகள் கூட பூர்த்தியடையாமல் இருக்கும் போது மற்ற பிரச்சனைகள் பெரிதாக தெரிவதில்லை.

சமுதயாத்தில் 90% குடும்பங்கள் இந்த கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. அந்த காலத்தில் 10-12 பிள்ளைகள் பெற்றவர்களும் இல்வாழ்கையில் முற்றிலும் திருப்தி அடைந்தார்களா என்று கேட்டால் இல்லையென்று தான் பதில் வரும். சமுதாய சட்டங்கள் பெண்களை கட்டிப் போட்டு வைத்திருந்தன. கல்வி அறிவு குறைவு. வெளி உலக தொடர்பு குறைவு. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்ற சட்ட திட்டத்தை ஆண் கையில் எடுத்து பெண்களை மோடி மஸ்தான் போல ஆட்டி வைத்திருந்தான். இப்போது கல்வி அறிவு, வேலை மற்றும் வெளியுலக தொடர்பு பெண்ணை விடுதலை அடைய செய்திருக்கிறது. தனக்கு வேண்டியது எது வேண்டாதது எது என்று அவளால் நிர்ணயம் செய்ய முடிகிறது. இனியும் அவள் கட்டுண்டு இறக்கத் தேவையில்லை.

விவாகரத்து விவகாரங்கள் அதிகரித்திருப்பது ஆண் பெண் இருபாலாரும் யோசிக்க வேண்டிய விஷயம். இனி பழங்கால பிரம்பை கொண்டு பிரச்சனைகளை மூடி மறைக்க முடியாது.

ஆண் பெண் இருவரும் நிஜத்தை உணர்ந்து பிரச்சனைகளை நேரிடியாக சந்திக்க வேண்டும். மருத்துவ முன்னேறம் விஞ்ஞான கண்டுபிடிப்புகள்

இவற்றை பயன்படுத்தி வாழ்கைய இனிமையாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அது நம் கையில் தான் இருக்கிறது.

ஆண் தன்னுடைய குறைபாடுகளை உணர்ந்து அதை எதிர் கொண்டு களைய வேண்டும். பெண் தன் கணவனின் குறைபாடுகளை நேரிடையாக பேசி தீர்க்க வேண்டும். அதை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் ஆணுக்கு வரவேண்டும். தனக்கு பிடித்தது எது எதை அவன் தனக்கு செய்தால் தன்னுடைய உணர்ச்சிகளின் தாகம் அடங்கும் என்பதை அவள் வெட்கத்தை விட்டு சொல்லும் தைரியம் வரவேண்டும். அவ்வாறு தன் மனைவி சொன்னால் அவள் வேசியோ என்று கீழ்த்தரமாக நினைக்கும் எண்ணத்தை ஆண் விடவேண்டும்.

இப்படியாக இணையத்தில் கிடைத்த கட்டுரை ஒன்றை மீண்டும் மீண்டும் படித்துக் கொண்டிருந்தாள் மதுமிதா. சற்றே தெளிவும் பெற்றாள்.

## 9

சுரேஷிடமிருந்து பல முறை தொலைபேசி அழைப்பு வந்தது. அதை தவிர்த்தேன். மறுபுறம் கிரிதர் என்னை மன்னித்துவிடு. நாம் நல்ல நண்பர்களாக இருப்போம். இனி உன்னைத் தொடக்கூட மாட்டேன். தயவு செய்து பேசு என்று குறுந்தகவல் அனுப்பியிருந்தான்.

கீழே சிந்திய தேனை ஈக்கள் மொய்ப்பது போல ஆனது என் நிலைமை. சரியாக மூன்று நாட்களுக்கு பிறகு கணவருடன் மதிய உணவு மேசையில் இருக்கும்போது சுரேஷிடமிருந்து மீண்டும் அழைப்பு வந்தது. இவனுக்கு என்ன தைரியம். இந்நேத்தில் என் கணவர் வீட்டில் இருப்பார் என்று தெரிந்துமே அழைக்கிறானே என்று நினைத்தேன்.

சில நிமிடங்களில் என் கணவனின் செல்பேசிக்கு அழைப்பு வந்தது. என் கணவரும் அதை எடுத்து சுரேஷ்  உன் கிட்டே பேசனுமாம் என்று கொடுத்தார். எனக்கு கைகள் நடுங்கியது. லபான் எனும் பாட்டிலில் வரும் தயிரை பிரிட்ஜிலிருந்து எடுத்து வரும் சாக்கில் செல்பேசியை கையில் எடுத்துக் கொண்டு சமையலறைக்குள் நுழைந்தேன்.

என்ன வேணும் உங்களுக்கு என்று காட்டமாக கேட்டேன்.

இது பாருங்க மதுமிதா அன்னிக்கு நான் நடந்துகிட்ட விதத்திற்கு மன்னிப்பு கேட்கப் போறதில்லை. ஆனா உங்களை இன்னொரு முறை கட்டாயம் சந்திக்கனும். அதுக்கு வாய்ப்பு கொடுங்க என்றான்.

என்ன தைரியம் இவனுக்கு. பண்ணது கேடித்தனம். மன்னிப்பும் கேட்க மாட்டானாமே. இவனுடன் உறவு வைத்துக் கொண்டு மாட்டிக் கொள்வதை விட ரகசியமாக கிரதருடனே உறவு வைத்துக் கொள்ள மாட்டேனா நான்.

அந்த அதள பாதாளத்தில் விழவேண்டாம் என்று தானே இவன் உதவி கேட்டேன். எனக்கு கோபமாக வந்தது.

எதுக்கு சந்திக்கனும் என்று கேட்டேன் கோபத்தை அடக்கிக் கொண்டு.

அது நான் உங்களை சந்திக்கும்போது சொல்றேன். ஒரே கடைசி முறை. என்னை நம்பி வாங்க என்றான் அவன்.

கணவன் முன்பு அதிகம் பேசவேண்டாம் என்று சரி என்று சொல்லி இணைப்பை துண்டித்தேன். வாழ்கையில் போன் இணைப்பை துண்டிப்பது போல் உறவுகளை சட்டென்று துண்டிக்க வழி இருந்தால் எப்படி இருக்கும். அப்படி ஒரு வசதி இருந்தால் கிரிதர் சுரேஷ் இருவரையும் துண்டித்துவிட்டு கட்டுரையில் படித்தது போல இன்னொரு முறை என்னுடைய கணவனிடமே சரணடைந்திருப்பேனே.

என் ஆதர்ஸ கணவர் சுரேஷ் என்ன சொன்னார் என்று கேட்கவில்லை. நானாகவே அவரு வேலையை பத்திக் கேட்டார் என்று சுருக்கமாக சொன்னேன். அவர் தயிர் சாதத்திற்கு ஊறுகாய் இட்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தார். இவர் என்ன ஜடமா, இல்லை என் மேல் அதிக நம்பிக்கையா, இல்லை இவருக்கு எதைப்பற்றியும் கவலை இல்லையா. நான் என்ன அழகாக இல்லையா. என்னை யாராவது கொத்திக் கொண்டு போகமாட்டார்களா. சே என்று நினைத்தேன்.

மறுநாள் 11 மணிக்கு அவனிடமிருந்து அழைப்பு வந்தது. கீழே இறங்கி அவன் காரில் ஏறினேன். எங்கு செல்ல வேண்டும் என்று அவனும் கேட்கவில்லை. நானும் சொல்லவில்லை. இம்முறை கை வைத்தால் செருப்பை கழற்றி அடி என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்.

உள்ளே நுழைந்ததும் காபி என்று கேட்டான்.

சரி என்றேன். காபி கொடுத்துவிட்டு அடுத்தது என்ன கட்டி அணைக்கப்போகிறாயா. அப்படி செய்தால் காபி சுடச்சுட உன் முகத்தில் ஊற்றுகிறேன் பார் என்று சொல்லிக் கொண்டேன்.

காபியும் வந்தது.

இதப் பாருங்க மதுமிதா. உங்க கணவர் என்னுடைய கொலீக் மட்டுமல்ல நல்ல நண்பரும். அவருக்கு நான் துரோகம் பண்ண மாட்டேன். எப்போ நீங்க உங்களுடைய பர்சனல் விஷயத்தை என்கிட்டே சொன்னீங்களோ அப்பவே நீங்களும் என் நண்பர் ஆயிட்டீங்க. உங்களுக்கும் துரோகம் செய்ய மாட்டேன். அன்னிக்கு நான் உங்களுக்கு வைச்சது சின்ன டெஸ்ட்.......

அவனை சுட்டெரிப்பது போல் பார்த்தேன். எனக்கு டெஸ்ட் வைக்க நீ யாரடா என்பது போல பார்வை.

கோபிச்சுக்காதீங்க. அந்த டெஸ்டல நீங்க பாஸ். அன்னிக்கு என்னை தள்ளிவிட்டு திட்டிட்டு போகாம இருந்திருந்தீங்கன்னா நீங்களும் பெயிலாயிருப்பீங்க. நான் உங்க மேல வைச்சிருந்த நம்பிக்கையும் பெயிலாயிருக்கும்.

என்ன என்று கேட்டேன்.

ஆமாம். அன்னிக்கு நீங்க ஒன்னும் செய்யாம அமைதியா இருந்திருந்தால் கூட நான் அதுக்கு மேல போயிருக்க மாட்டேன். ஆனா உங்க கணவரு கிட்டே சொல்லி விவாகரத்து பண்ண சொல்லியிருப்பேன். ஏன்னா என்னுடைய முயற்சி உங்களோட உறவு வைச்சிருக்கறதுகாக அல்ல. நீங்க தடம் மாறிவிடுவீங்களோன்னு பாக்கத்தான்.

சரி என்ன இப்போ அதுக்கு என்று கேட்டேன் குழப்பத்துடன்.

மதுமிதா நான் உங்களுக்கு உதவ தயாரா இருக்கேன். நீங்களும் பிரபாகரும் சந்தோஷமா வாழ்கை நடத்தனும் அது தான் என் ஆசை என்றான்.

எப்படி ஹெல்ப் பண்ணப்போறீங்க என்று கேட்டேன் பீடிகையுடன்.

சரி நான் கேட்கறதுக்கு பொறுமையா பதில் சொல்லுங்க.

அவன் மிக தூரத்தில் அமர்ந்திருந்தான். காபி கூட மேசையின் மேல் வைத்து அமர்ந்தான். அவன் பேசியதில் சற்று நம்பிக்கை வந்தது. இல்லாவிட்டாலும் கூட செங்கல் போல் கையில் இருக்கும் செல்பேசியை வைத்து ஒரே அடி மண்டையில் போட முடியும் என்ற நம்பிக்கையும் இருந்தது.

சொல்லுங்க என்றேன் அவனைப்பற்றி தப்பான எண்ணங்களை அழித்துவிட்டு.

உங்க கணவன் புகைபிடிப்பாரா

இல்லை.

மது அருந்தும் பழக்கம்

இல்லை.

உங்களை கேவலமாக நடத்துகிறார். அதாவது திட்றது அடிக்கறது

இல்லை.

உங்க குடும்பத்தை பத்தி தரகுறைவாக பேசுகிறாரா

இல்லை.

நீங்க கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுக்கறாரா.

கேட்டதுக்கு மேலையே. கேக்கறதுக்கு முன்னாடியே.

அப்படியா பலே. உங்களுக்கு தேவையான சுகந்திரம் கொடுத்திருக்காரா.

ஆமாம். இல்லாட்டி அவரு போன்ல நீங்க என்கிட்டே நேத்து பேசியிருக்கமுடியாது.

நல்லது. இப்ப உங்களுடைய ஒரே குறை உங்க இல்வாழ்கையில் திருப்தி இல்லை சரியா.

ஆமாம்.

ஒருவேளை அதில் திருப்தி தந்துட்டு முன்னே சொன்னது அத்தனையும் தலைகீழா இருந்தா பரவாயில்லையா

அதெப்படி என்றேன்.

இதப்பத்தி நீங்க அவர்கிட்டே பேசிப் பாத்தீங்களா.

இல்லை. அதெப்படி அவர்கிட்டே போய்..... என்று இழுத்தேன்.

சரி. நானும் ஒரு ஆம்பிள்ளை தானே. என்கிட்டே பேசறீங்களே.

ம்ம என்று யோசித்தேன். நானும் உங்க கிட்டே இலைமறை காயா தானே பேசறேன் என்றேன்.

அது மாதிரி அவருகிட்டே பேசலாமா.

எனக்கு தைரியம் வரலை. எனக்கு வெட்கமாக இருக்கு.

இங்க பாருங்க மதுமிதா. இந்த ஜெனரேஷன் ரொம்ப வீக். நாம குடிக்கிற பால் ஆகட்டும் இல்லை சாப்பிடற சாப்பாடாகட்டும் எல்லாத்திலேயும் கலப்படம். வாழ்கை முறை மிகவும் கடினமாக மாறிடுத்து. ஆபீஸ்ல பாலிடிக்ஸ். எல்லாருக்கும் ஒரு பாதுகாப்பின்மை. வெளியே போனா லஞ்சம் ஊழல் கொலை கொள்ளை. செய்தி சானாலை பார்த்தா உலகமே குட்டிசுவரா ஆன மாதிரி ஒரு சித்தரிப்பு. அது மட்டுமல்லாம பாலியல் கல்வி இல்லாமை.

ஒரு மனுஷன் காலையில பைக்கிலேயோ கார்லேயோ போனா 4 மணி நேரம் ரோட்ல தான். வீட்டுக்கு வந்தா சாப்பிட்டு படுத்தா போதும்னு இருக்கு. அவனால நிம்மதியா உறவு வைச்சிக்க முடியறது இல்லை. அந்த காலத்தில காட்டுலேயும் மேட்டுலேயும் கடினமா உழைச்சாங்க. நல்ல ஆரோக்கியமான உணவை சாப்பிட்டாங்க. இல்வாழ்கையை நல்லா என்ஜாய் பண்ணாங்க. இப்ப அப்படி இல்லை. உட்கார்ந்து பாக்கற வேலையால ஆணோட வீரியம் குறையுது. தவறான பாலியல் பாடங்களால அவனுடைய மனத்தோட வீரியம் குறையுது.

மேல் நாட்ல குழந்தை பிறந்த உடனே தனியா படுக்க வைக்கறாங்க. அதனால 60 வயசு வரைக்கும் கூட அந்த விஷயம் தொடர்ந்து இருக்கு. நம்ம ஊர்ல பிள்ளைங்க நம்ம கூட தான் படுக்கறாங்க. கூட்டு குடும்பம் வந்தா பிரைவேசி இல்லை. வீட்டு கடன் வாகன கடன் இப்படி பல பிரச்சனைகள். மிடில் க்ளாஸ் மொத்தமும் கோவிந்தா தான். இதைப்பத்தி உங்களுக்குத் தெரியுமா என்று கேட்டான்.

படிச்சிருக்கேன். ஆனா நீங்க சொல்றது சரி. இங்க பஹ்ரைன்ல என்ன பிரச்சனை. போக்குவரத்து பிரச்சனை இல்லை. லஞ்சம் இல்லை. டிவியில கூட அவரு சிரிப்பொலி இல்லாட்டி ஆதித்யா தான் பாக்கறாரு. நாங்க இரண்டு பேரு மட்டும்தான் வீட்ல.

ஹா ஹா. நீங்க சொல்றது சரிதான். ஆனா இங்கே வேற பிரச்சனைகள். அரபு நாடுகள் பெரிய கொந்தளிப்பில இருக்கு உங்களுக்கு தெரியுமா. அதுக்கு மேலே ரிசெஷன் வேற. எங்களுடைய வேலை நிரந்தரம் இல்லை. போர் வந்தா எப்ப வேணும்னாலும் பையை தூக்கிட்டு ஓட வேண்டியதிருக்கும். அப்படி ஓடினா நம்ம ஊர்ல இது மாதிர வேலை கிடைக்குமா இத்தனை சம்பளம் கிடைக்குமா இந்த மாதிரி நல்ல வாழ்கை வாழ முடியுமா அப்படியெல்லாம் மன அழுத்தத்திலே இருக்கோம். முக்கியமா நான் குடும்பத்தை இங்கே அழைச்சிகிட்டு வராததற்கு இதுவே காரணம்.

இதெல்லாம் எங்கிட்டே சொல்லியிருக்கலாமே அவரு.

அதான் நாங்க. நாங்க எப்போதுமே உங்களுக்கு சுகத்தை மட்டும் கொடுத்துட்டு கஷ்டங்களை நாங்களே வைச்சிக்கறோம். இது ஆம்பிள்ளைங்க பண்ற தப்பு தான்.

எனக்கென்னமோ இந்த பிரச்சனையிலாம் இல்லாட்டிக் கூட அவரால அந்தரங்க உறவுல நீடிக்க முடியாதுன்னு தான் தோணுது என்றேன் அழுத்தமாக.

இருக்கலாம். நான் சொன்னதும் ஒரு காரணம். இப்ப உங்க கணவரோட பிரச்சனை மருத்துவத்தாலேயும் உங்களுடைய உதவியாலேயும் குணம் செய்யலாம்.

எப்படி

முதல்ல அவருக்கு இந்த குறையிருக்கு அப்படிங்கற விஷயத்தை நீங்க தெரிஞ்சிகிட்டதை அவருக்கு நாசூக்கா சொல்லுங்க. இரண்டாவது சாதாரண நேரங்கள் கூட அவர்கிட்டே உட்காருங்க. அவர் கையை பிடிச்சிகிட்டு. அப்பப் முத்தம் கொடுங்க. உடல் உறவு இல்லாத நாட்கள்ள கூட அவரை அணைச்சிகிட்டு படுங்க.

இதை கேட்க கேட்க நான் சங்கடமாக நெளிந்தேன்.

முடிஞ்ச அளவுக்கு வாரத்தில நாலு ஐந்து நாட்கள் உடலோட இணையுங்க. முதல் வாரம் இப்ப இருக்கற மாதிரியே சீக்கிரம் முடிஞ்சிடும். பரவாயில்லை. தொடர்ந்து பண்ணுங்க. ஆணோட உடல் 24 மணிநேரத்தில உயிர் திரவங்களை சுரந்துகிட்டே இருக்கும். சில வாரங்களுக்கு அப்புறம் நீங்களே நல்ல முன்னேற்றம் பார்ப்பீங்க.

மருந்து....

அதை நான் பாத்துக்கறேன். கவலைப்படாதீங்க. சரியான நேரத்துல நானே அவர்கிட்டே பேசறேன்.

ஐயோ...

கவலை வேண்டாம். நீங்களும் நானும் சந்திக்கவே இல்லை. இதைப்பத்தி பேசவே இல்லை.

சரி.

உங்க கணவர் வீட்டு சேதிகளை சுலபமா யாருகிட்டேயும் ஷேர் பண்ண மாட்டாரு. அதுக்கு முதல்ல நீங்க அவர்கிட்டே பேசன பிறகு, சில நாள்

அவரே உங்க கிட்டே வந்தாலும் தள்ளிப்படுங்க. அவரை கொஞ்ச யோசிக்க வையுங்க. அவரு என் கிட்டே ஆலோசனைக்கு வருவாரு. அப்ப பாத்துக்கறேன்.

அவரு உங்க கிட்டே இதைப் பத்தி பேச வருவாரா.

கவலைப்படாதீங்க நானும் அவரும் ஒரே வயசு. மத்தவங்கல்லாம் பெரியவங்க. கட்டாயம் என்கிட்டே பேசுவாரு.

சரி என்று சொல்லிவிட்டு எனக்கு நேரமாயிடுத்து என்றேன்.

கவலை வேண்டாம். இன்னிக்கு டாக்ஸி வேண்டாம் நானே டிராப் பண்றேன் என்று சொல்லி சிரித்தான்.

ரொம்ப தாங்க்ஸ் என்று சொல்லி கீழே இறங்கினேன்.

மனம் லேசானது.

## 10

சுரேஷ் சொன்னவற்றில் சிலவற்றையாவது செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் படுக்கை அறைக்கு சென்றதும் அவருடன் நெருங்கிப் படுத்தேன்.

என்னங்க, இந்த ஊர்ல சுன்னத் பண்ணிக்கிறாங்களே அது என்ன என்று கேட்டேன். நான் கிரிதரிடம் முழுவதும் சரணடைவதற்குள் இந்த நல்ல மனிதருக்கு ஒரு வாய்ப்பு கொடுக்க வேண்டும் போல் தோன்றியது.

அது எதுக்கு இப்போ. நீ தூங்கு என்றார்.

இல்லை சொல்லுங்க.

உனக்கு தெரியாதா.

ம்ம். தெரியும். அது மருத்துவ ரீதியிலும் ரொம்ப நல்லதுன்னு சொல்றாங்க இல்லையா.

ஆமா.

நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. உங்க... அது.. ரொம்ப சென்ஸிட்டீவ். ஒரு வேளை சர்கம்சிஷன் பண்ணிக்கிட்டா சென்ஸிட்டீவிட்டி குறையும். அப்ப நீங்க இன்னும் பெட்டரா பர்பாம் பண்ணலாம் என்று சொல்லி முடித்துவிட்டு ஓடி விட வேண்டும் போலிருந்தது.

அவர் அமைதியானார். மது, எனக்கு உன்னை முழுசா திருப்தி படுத்த முடியலைன்னு தெரியது. ஆனா என்ன பண்றதுன்னு தான் தெரியலை. நான்

உன்னை கல்யாணம் செஞ்சிகிட்டு உன் வாழ்கையை கெடுத்துட்டேன்னு நினைக்கிறியா என்றார் நாதழுக்க.

இல்லை பிரபா. பிரபா என்றே அழைப்பேன். சோம்பேறித்தனத்திற்காக தான். அவர் நான் ஏதோ செல்லமாக அழைக்கிறேன் என்று நினைத்திருப்பார் போலும்.

இல்லை பிரபா. நான் உங்க கிட்டே ரொம்ப சந்தோஷமா இருக்கேன். நீங்க ஒரு அருமையான மனிதர். சாப்பாடு தூக்கம் மாதிரி இது உடலோட தேவை தானே. அதை பட்டினி போட்டா மனசும் பாதிக்குது இல்லையா என்றேன் பொறுமையுடன்.

எனக்கு தெரியுது மது. சர்கம்சிஷனால எனக்கு இம்ரூவ்மென்ட் வரும்னு நினைச்சின்னா நான் செஞ்கிக்கறேன் என்றார்.

இது முதல் படி தான். மனைவியின் உடல் ரீதியான தேவையை காமம் என்று மட்டப்படுத்தாமல் வேசி என்று ஏசாமல் தன் குறையை உணர்ந்து அதை திருத்தவும் முயலும் ஒரு ஆண். அவன் என் கணவன். நான் கொடுத்து வைத்தவள்.

அவரை அணைத்துக் கொண்டே எவ்ரிதிங்க் வில்பி ஆல்ரைட் என்று சொன்னேன். இனி கிரிதர் பற்றி கட்டாயம் நினைக்கக்கூடாது என்று முடிவெடுத்தேன்.

## 11

அனைத்தையும் சரி செய்துவிடலாம் என்ற நம்பிக்கையுடன் புதிய நாளை துவக்கினேன். இது ஒரு பொன் காலை பொழுது தான்.

நான் எதிர்பார்காத ஒன்று நடந்தது.

இந்த மத்திய கிழக்கே கேரளத்தவரின் கடின உழைப்பால் உருவானது என்று சொன்னால் மிகையாகாது. பொது மேலாளர் பணியிலிருந்து சிறிய வேலை வரை இவர்களை காணலாம். வெகு விரைவில் அரபு மொழியும் கற்று விடுகிறார்கள். கோல்ட் ஸ்டோர் என்று நம்ம ஊர் பெட்டிக் கடை போன்ற கடைகளை சொல்கிறார்கள் இங்கே. ஆனால் அதைவிட பெரியது. வீட்டிற்கு பொருட்களை கொண்டு வந்து தந்து காசு வாங்கிக் கொள்ளும் சேவை. ஒரு பால் பாட்டில் வேண்டும் என்றாலும் கூட சலிக்காமல் தந்து செல்வார்கள். எனக்கு சோம்பேறித்தனமாக இருந்த நாட்களில் தொலைபேசி எடுத்து இது வேண்டும் அது வேண்டும் என்று கேட்பேன். 15 நிமிடத்தில் என் வீட்டில் இருப்பார்கள். இன்று வீட்டின் அழைப்பு மணி அடித்தது. நான் ஒன்றும் ஆர்டர் செய்யவில்லையே என்று யோசித்தவாறே கதவைத்திறந்தேன். சட்டென்று கிரிதர் உள்ளே நுழைந்தான்.

என்ன மதுமிதா என்னோட போனை எடுக்க மாட்டேங்கறீங்க. என் மெஸேஜ்ஜூக்கு பதில் இல்லை. என்ன இது என்றான்.

நான் அதிர்ச்சியில் சாத்தாமல் நின்ற கதவை சாத்தினான்.

கிரிதர் வேண்டாம். என்னை குழப்பாதீங்க. நீங்க போங்க என்றேன். அவனை பார்த்தும் என்னுடைய உறுதி தளர்ந்து போயிருந்தது.

மது நான் உங்களை விரும்பறேன். ஐ லவ் யூ. வெறும் டைம் பாஸ்ஸூன்னு நினைக்காதீங்க. நான் உங்களை கல்யாணம் செய்துக்கவும் தயாராக இருக்கேன் என்று சொல்லி என் கைகளை பிடித்தான்.

வேண்டாம் கிரிதர். வேண்டாம். இதெல்லாம் நடக்கற காரியம் இல்லை. என்னை விட்டுடுங்க ப்ளீஸ் என்றேன். கைகளை விடிவிக்க வில்லை இன்னும்.

அவன் சட்டென்று என்னை கட்டியணைத்து இறுக முத்தமிட்டான். என்னை படுக்கையறைக்கு தூக்கிச் சென்று கிடத்தினான். நான் போராடும் முன் என் மேல் விழுந்தான். கசக்கினான். பிழிந்தான். நான் என்னை இழந்தேன்.

ஆணின் வெறி அடங்கிவிட்டிருந்தது. பெண்ணின் சோதனைகள் துவங்கிவிட்டிருந்தது. போராடும் சக்தி எனக்கில்லாததை நினைத்து நொந்தேன். உடல் வலித்தது. அதிலும் ஒரு சுகம் இருந்தது. காய்ந்த இலைகளில் நீரோட்டம் மீண்டும் பசுமையை தந்தது. இவன் ஒன்றும் நானூரு மீட்டர் ஓடுபவன் அல்ல. ஆனாலும் பிரபாவைவிட அதிக தூரமே ஓடியிருந்தான். இந்த அனுபவம் புதிதாக இருந்தது. இந்த களவு இனிமையாக இருந்தது.  அப்படியே எத்தனை நேரம் படுத்திருந்தோம் என்று தெரியவில்லை.

அவன் எழுந்து ஆடைகளை சரிசெய்துக் கொண்டு மது நீ எனக்கு மட்டும் தான் சொந்தம் என்று சொல்லி மீண்டும் முத்தமிட்டான். நான் ஒன்றும் சொல்வதற்கு முன் வெளியேறினான்.

கதவைக்கூட பூட்டாமல் பொத்தென்று படுக்கையில் விழுந்தேன். உடல் வலியுடன் மன வலியும் துவங்கியது.

சிறிது நேரத்தில் உடல் கொதித்தது. உள்ளமும் தான். சரி தவறு விவாதங்கள் தலையை கனக்க செய்திருந்தது.

என் குற்ற உணர்வு என்னை துவம்சம் செய்துக் கொண்டிருந்தது. எத்தனை நல்ல மனிதர் இவர். ஒரு விஷயத்திற்காக இவருக்கு துரோகம் செய்யலாமா.

மெல்ல விசும்பினேன். ஓவென்று அழுதேன். அழுதுக் கொண்டே இருந்தேன். அன்று மதியம் சாப்பாடு சமைக்கவும் இல்லை. என் கணவர் பிரபா வரவும் இல்லை. 15 நிமிடம் தாமதமானாலே ஏன் தாமதம் என்று செல்பேசியில் அழைத்து காரணம் சொல்பவர், அவரிடமிருந்து தகவல் இல்லை. நானும் சாப்பிடவில்லை. ஒரு சமயம் கிரிதர் சொன்னது போல் அவனை திருமணம் செய்து கொண்டு போனால் என்ன என்று தோன்றியது. மறுபுறம் நான் திருமணமாகி இருந்தும் மற்றொருவனுடன் உறவு கொண்டது துரோகம் என்று தோன்றியது.

மாலை ஆறு மணியிருக்கும். சுரேஷ் என் கணவரை கைபிடித்து அழைத்து வந்தார். அவரோ வேட்டி சட்டையுடன் மெதுவாக நடந்து வந்தார். அதை பார்த்ததும் பதறிப்போனேன்.

ஓடி வந்து என்னாச்சு பிரபா என்ற கேட்டேன். சுரஷை பார்த்து என்னாச்சு என்னாச்சு இவருக்கு என்று கத்தினேன.

ஒன்னும் இல்லை மதுமிதா. அவரே சொல்வாரு. எதாவது வேணும்னா போன் பண்ணுங்க என்று சொல்லிவிட்டு என்னை பார்த்து கண்ணடித்துவிட்டு நகர்ந்தார். என் பேய் கோலம் அவர் கண்ணுக்கு படவில்லை போலும். நான் என் கணவரின் கையை பிடித்து அழைத்து வந்து சோபாவில் அமர வைத்தேன். அப்போது தான் என் உடலின் சூடு அவரை தாக்கியது.

என் நிலைமை பார்த்ததும் என் கணவர் பயந்து போயிருந்தார். என்னாச்சு உனக்கு. என்ன ஜூரமா. டாக்டர்கிட்டே போலாமா என்றெல்லாம் கேட்டார்.

ஒன்னும் இல்லை. குளிர் ஜொரம். பானாடால் கோல்ட் அன்ட் ப்ளூ மருந்து சாப்பிட்டா சரியா போயிடும். டின்னர் பிருந்தாவன்லேர்ந்து ஆர்டர் பண்ணிடறேன். உங்களுக்கு என்னாச்சு என்று கேட்டேன் பதற்றம் குறையாமல். உடலை எப்போதும் ஆரோக்கியமாக வைத்திருப்பவர் என் கணவர். மத்திய கிழக்கு நாடுகளில் வேலை செய்வர்கள் விரைவில் தொந்தியை பெற்றுவிடுகின்றனர். ஆனால் அந்த பிரச்சனை என் கணவருக்கு இல்லை. ஸ்மார்ட்டாகவே இருப்பார்.

மது, நீ சொன்ன ஐடியாவை இன்னிக்கே எக்ஸிக்யூட் பண்ணிட்டேன். என் உடனே பிறந்து வளர்ந்த என் தோழனுக்கு இன்னிக்கு பிரிடிஷ் ஸ்டைல் கட் பண்ணிட்டேன் என்றார் புன்னகையுடன்.

என்ன சொல்றீங்க என்று குழப்பம் தீராமல் கேட்டேன்.

நம்ம ஊரு பாய் மாதிரி நானும் சுன்னத் பண்ணிக்கிட்டேன். அமெரிக்கன் மிஷன் ஹாஸ்பிடல்ல மத்தியானம் எனக்கு சர்கம்ஸிஷன் நடந்தது என்றார் சகஜமாக.

எனக்கு கோபம். என் கிட்டே ஏன் ஒரு வார்த்தை சொல்லலை. நான் வந்திருப்பேன்ல ஆஸ்பத்திரிக்கு. சும்மா ஒரு பேச்சுக்கு தானே சொன்னேன். இன்னிக்கே செய்யச் சொன்னேனா என்றெல்லாம் அரற்றினேன்.

மெதுவாக நடந்து சென்ரு ஒரு மாத்திரையை எடுத்து வந்தார். நீ ரெஸ்ட் எடு என்றார். பிறகு சிறிய பட்டி எடுத்து நீரில் நனைத்து என்னை தலையில் வைத்து கைகளால் என்னை ஆறுதலாக அணைத்துக் கொண்டார்.

என் குற்ற உணர்வு என்னை துவம்சம் செய்துக் கொண்டிருந்தது. எத்தனை நல்ல மனிதர் இவர். ஒரு விஷயத்திற்காக இவருக்கு துரோகம் செய்யலாமா என்ற கேள்வி மீண்டும் மீண்டும் வந்தது.

அவரை இறுக அணைத்துக் கொண்டேன். மெல்ல விசும்பினேன். அவர் பதறிப்போனார். என்னாச்சும்மா ஏன் அழுவறே. இது சாதாரணம ஜுரம் தான் என்றார். அவருடைய அப்பாவதித்தனம் என்னை கொன்று போட்டது. இன்னும் இறுக அணைத்தேன்

நான் வேணா உங்க அப்பா அம்மாவுக்கு விசா போட்டு வரவழைக்கட்டுமா. நீ ஊரை மிஸ் பண்றியா. நான் வேணா உனக்கு டிக்கெட்டு போடட்டுமா. ஊருக்கு ஒரு மாசம் போயிட்டு வரியா என்றெல்லாம் கேட்டார். என் அழுகை அதிகரித்தது. அவரை கட்டி அணைத்து அவரை முகமெல்லாம் முத்தமிட்டேன்.

## 12

கிரிதரை கொன்று விடவேண்டும் போலிருந்தது. என் அனுமதியில்லாமல் என்னை அழிக்க அவனுக்கு என்ன தைரியம். அது சரி நானும் அவனை அந்த அளவுக்கு போகவிட்டது என் தப்புத்தானே.

மீண்டும் மறு நாள் 10 மணிக்கு அழைத்தான் தொலைபேசியில்.

வரட்டுமா என்றான்.

இது என்ன அந்த மாதிரி வீடா நீ எப்ப வேணாலும் வர்றதுக்கு என்றேன் காட்டமாக.

ஹே சில் என்றான்.

இதப்பாரு என் ஹஸ்பெண்ட் வீட்ல இருக்காரு என்றேன்.

ஹேய் கதைவிடாதே. இந்த நேரத்துல அந்த அலார்ம் க்ளாக் ஆபீஸ்ல இருக்கும் என்றான்.

என் கணவனை நான் என்ன வேண்டுமானாலும் சொல்வேன். அதை இவன் எப்படி சொல்லலாம்.

நீ ரொம்ப வரம்பு மீறி போறே கிரிதர் என்றேன் கோபமாக.

அது தான் நேத்தே வரம்பு மீறிட்டோமே மது. இன்னிக்கும் மீறலாம். டெய்லி மீறலாம். என்னை கல்யாணம் பண்ணிக்கோ என்றான்.

போனை வை என்றுவிட்டு துண்டித்தேன். எனக்கு கோபம் தலைக்கு ஏறியது. ஒரு புறம் சுரேஷ் நான் கேட்டுக் கொண்டதற்காக என் பிரச்சனைகளை சிரமேற்று உதவ தயாராக இருக்கிறான். இன்னொரு புறம் என் கணவர் நான் சொன்ன ஒரே வார்த்தைக்காக அறுவை சிகிச்சை செய்து வந்து படுத்திருக்கிறார். இன்னொரு புறம் இந்த பிணம் தின்னி கழுகா என்று நினைத்தேன். அவன் மேல் இருந்த மோகம் முற்றிலும் போயிருந்தது. இன்னொரு முறை வந்தால் அவன் முக்கிய உறுப்பை வெட்டி இந்த ஊரில் சுற்றும் பூனைகளுக்கு போடுகிறேன் பார் என்று சொல்லிக் கொண்டேன்.

நேற்று செய்த தவறை எப்படி சொல்வது பிரபாவிடம். சொல்லலாமா வேண்டாமா. சொன்னால் என்னை விவாகரத்து செய்துவிடுவாரோ என்றெல்லாம் யோசித்து பயந்தேன்.

வீட்டின் அழைப்பு மணி அடித்தது. சுரேஷ் தான் என் கணவனை பார்த்து போக வருகிறார் என்று நினைத்தேன். கதவை திறந்தால் கிரிதர். பதறிப்போனேன். எதுவும் யோசிக்கும் முன் கதவை திறந்து உள்ளே நுழைந்தான். என்னை அணைக்க முயன்றவன் சோபாவில் என் கணவர் அமர்ந்திருப்பதை பார்த்ததும் மிரண்டு போனான்.

ஹலோ சார் வணக்கம். நான் கிரிதர் என்றான்.

ஹலோ வாங்க. நீங்க என்று இழுத்தார் பிரபா.

நான் உடனே, இவர் கிரிதர். இவர் கம்பெனியில் தான் அன்னிக்கு இன்டர்வ்யூ போய் வந்தோம் என்றேன்.

ஓ நீங்களா. வாங்க உட்காருங்க என்றார். எதிரியை கூட நிக்க வைத்து பேச மாட்டார் போலிருக்கிறது என் கணவர். என்ன விஷயம்.

அதுவா சார். உங்க மனைவி அடுத்த வாரத்திலேர்ந்து வேலைக்கு வரலாம். அதை சொல்ல போன் பண்ணேன். அவங்க எடுக்கலை. இந்த பக்கமாக போயிட்டிருந்தேன். சரி நேர்ல சொல்லலாம்னு வந்தேன் என்றான். இவன் வாயிலிருந்து பொய் தான் எத்தனை சரளமாக வருகிறது.

ஓ அதுவா. எனக்கும் உடம்பு சரியில்லை. என் மனைவிக்கும் உடம்பு சரியில்லை. ஒரு வேளை அதனால போன் எடுக்கலை போலிருக்கு. ரொம்ப நன்றி. கட்டாயம் அடுத்த வாரத்திலேர்ந்து வருவாங்க. நீங்க காபி சாபிடறீங்களா என்று கேட்டார் என் கணவர்.

அவன் காபி சாப்பிட வரவில்லை. என்னை சாப்பிடத்தான் வந்திருக்கிறான் என்று சொல்ல வேண்டும் போலிருந்தது.

இல்லை சார். ஒரு மீட்டிங்க் இருக்கு. சொல்லிவிட்டு போகலாம்னு வந்தேன். வரேன் சார். வரேன் மேடம் என்று சொல்லி வெளியேறினான்.

அவன் போன பின்பும் பதட்டம் அடங்கவில்லை.

சற்று நேரத்தில் மீண்டும் அழைப்பு மணி. யாராக இருக்கும் என்று யோசித்தவாறே சற்று பயந்தவாறே கதவை திறந்தேன். சுரேஷ்.

வாங்க என்று அழைத்தேன். பிரபாவை பாத்துட்டு போக வந்திருக்கீங்களா என்று கேட்டேன் நேரம் கடத்தாமல்.

அதுவும் சரிதான். ஆனால் உங்களை டாக்டர்கிட்டே அழைச்சிகிட்டு போக வரமுடியுமான்னு உங்க ஹஸ்பென்ட் கேட்டார். அதனால வந்தேன் என்றேன்.

என் கணவரை கட்டி அணைக்க வேண்டும் போல் இருந்தது. என் மேல் எத்தனை நம்பிக்கை அவருக்கு.

உட்காருங்க டிரெஸ் சேஞ்ஜ் செய்து கிட்டு வரேன் என்று உள்ளே சென்றேன். எனக்கு மருத்துவமனை போக வேண்டிய அவசியம் இல்லை. கரு தரிக்க எந்த நாட்களில் உறவு கொள்ள வேண்டும் என்று கணக்கிட்டு சொல்லும் பிரக்னென்ஸி ஆன்லைன் கைட் எனும் தளத்தில் நேற்று கொண்ட பாதுகாப்பற்ற உறவால் கரு தரிக்க வாய்ப்பு இல்லை என்றதை உணர்ந்திருந்தேன். ஜூரம் குறைந்திருந்தது. ஆனால் சுரேஷிடம் பாவ மன்னிப்பு கேட்கவாவது வெளியே போக வேண்டும் என்று நினைத்தேன்.

காபி ப்ளாஸ்கில் வைச்சிருக்கேன். இங்கே ராயல் பஹ்ரைன் போயிட்டு வரேன் என்று சொல்லிவிட்டு சுரேஷின் காரில் ஏறினேன். சுற்றும் முற்றும் பார்க்க வேண்டிய அவசியம் இன்றில்லை.

## 13

ஹாஸ்பிடல் வேண்டாம் உங்க ரூமுக்கு போகலாம் என்றேன்.

அவனும் யோசித்தவாறே ஒன்றும் பேசாமல் அவனுடைய வீட்டிற்கு சென்றான். உள்ளே நுழைந்ததும் காபி என்று கேட்டான். இதை ஒரு பழக்கமாகவே வைத்திருந்தானோ என்னவோ.

வேண்டாம் என்றேன்.

சரி என்ன என்பது போல் பார்த்தான்.

ஓடிச் சென்று அவனை அணைத்துக் கொண்டேன். இந்த அணைப்பில் காமம் இல்லை. ஒரு சகோதரி ஒரு சகோதரனை அணைத்த அணைப்பு போல. என் குற்ற உணர்ச்சி என்னை கொலை செய்துக் கொண்டிருந்தது. யாராவது ஆறுதல் தேவை என்பது போலிருந்தது. யாரிடமோ பாவ மன்னிப்பு கேட்க வேண்டும் போல் இருந்தது. யாரையாவது கட்டிக் கொண்டு அழ வேண்டும் போல் இருந்தது. என் அந்தரங்கங்களை அறிந்த இவனே மேல் என்று தோன்றியது. ஓவென்று அழுதேன்.

அவன் ஒன்றும் செய்யாமல் அமைதியாக இருந்தான். அவன் உடல் சூடேறவில்லை. ஒரு பெண்ணின் அணைப்பு அவனுள் வேதியியல் மாற்றங்கள் ஏற்படுத்த வில்லை. அந்த உறவின் முக்கியத்துவத்தை அவன் அறிந்திருந்தான். அவள் கஷ்டங்களை உணர்ந்திருந்தான். மெதுவாக அவள் தலையை கோதிவிட்டான். பிறகு அவள் அழுகை குறைந்ததும் மெதுவாக அவள் கை பிடித்து சோபாவில் அமர்த்தினான்.

மதுமிதா, இது ஒரு சின்ன சர்ஜரி தான். பயம் வேண்டாம். நல்லபடியா முடிஞ்சுது. இன்னும் 2-3 வாரத்தில் அவர் சகஜமா இருக்கலாம். அப்புறம் ஒரு விஷயம் அவர் என்கிட்டே தான் இந்த சர்ஜரி பண்ணணும் சொன்னார். நான்

தான் அரேஞ்ஜ் பண்ணேன். அவர்கிட்டே தெளிவா பேசிட்டேன். டாக்டர் கிட்டேயும் தெளிவா பேசிட்டேன். அவரும் மருந்து கொடுத்திருக்காரு. அவர் அடுத்த மாசம் மருந்து சாப்பிட்டுகிட்டு ரெகுலரா உடலால் இணைஞ்சிகிட்டு இருந்தீங்கன்னா அப்புறம் பாருங்க உங்க வாழ்கையே சூப்பராயிடும் என்றான்.

நான் அவன் கைகளில் என் தலையை வைத்து மீண்டும் அழுதேன்.

என்னாச்சு என்னாச்சு என்றான்.

நான் ஒரு தப்பு பண்ணிட்டேன் சுரேஷ் என்று அழுதுக் கொண்டே படபடவென்று கிரிதரை சந்தித்தது முதல் என் கண்ணியத்தை இழந்தது வரை சொல்லி முடித்தேன்.

அவன் அதிர்ந்த நின்றான். சற்றே விலகிச் சென்று அமர்ந்தான்.

ஓ. ஓ. ஹோ என்று அரற்றினான். அவசரப்பட்டுட்டீங்களே மதுமிதா. உங்களுக்காக தான் அவர் சர்ஜரி செஞ்சிகிட்டாரு. இன்னும் 4 வாரத்துல அவர் முற்றிலும் குணமாயிடுவாரு. உங்க வாழ்கை ஓஹோன்னு இருந்திருக்குமே. ஏன். ஏன். என்கிட்டே கண்ணியமா நடந்துகிட்ட நீங்க அந்த பையன் கிட்டே எப்படி இழந்தீங்க என்று கேட்டான் குரலை உயர்த்தி.

தெரியலை சுரேஷ். நான் ஒரு முட்டாள். அன்னிக்க காலையில தான் அவன் வேண்டவே வேண்டாம்னு முடிவ செஞ்சேன். ஆனால் கண் இமைக்கும் நேரத்துல எல்லாம் முடிஞ்சிடுத்து. நான் அவருக்கு தகுதியில்லை. அந்த நல்ல மனுஷனுக்கு முன்னால போய் என்னால நிக்க முடியாது இனிமேலே என்று கதறினேன்.

இந்த மன நிலையில் நான் தற்கொலைக்கு போய்விடுவேனோ என்று நினைத்தான் போலும். அவன் குரலை தாழ்த்திக் கொண்டு சற்றே ஆறுதலாக....

மதுமிதா. கண்ணை துடைங்க. பிரபாகர் பத்தி எனக்கு நல்லா தெரியும். அவர் ஒரு அற்புதமான மனிதர். சராசரி மனிதரை போல அவர் யோசிக்க மாட்டார். நீங்க உங்களை தண்டிக்கறதா நினைச்சி எதுவும் அவசர பட்டு செஞ்சி அவர் வாழ்கையை நாசமாக்கிடாதீங்க. நான் சொல்றதை பொறுமையா கேளுங்க. அவர்கிட்டே போங்க. கிரிதரை பார்த்து என்னை பார்த்தது நீங்க என் கிட்டே பேசினது கிரிதர் கிட்டே இழந்தது எல்லா விஷயத்தையும் சொல்லுங்க. அதுக்கப்புறம் அவரு விவாகரத்து கேட்டா அதை விதியா நினைச்சி ஏத்துக்கங்க. அவரு கட்டாயம் விவாகரத்து கேட்க மாட்டார். தைரியமா போய் பேசுங்க. உங்களுக்கு எந்த கஷ்டமும் வராது என்றான்.

அவன் சொன்னது சரியாக பட்டது.

## 14

வீட்டுக்குள் நுழைந்ததும் நேராக குளியலறை சென்று குளித்து முடித்தேன். புத்தாடை அணிந்தேன். பூஜை அறைக்கு சென்று முருகனை வேண்டினேன். எந்த முடிவு அவர் எடுத்தாலும் நான் தயார். என் தவறுக்கு தண்டனை எதுவானாலும் தயார் என்று பரம்பொருளிடம் சொன்னேன். எது வந்தாலும் சந்திக்கும் சக்தி கொடு என்று மன்றாடினேன். நெற்றியில் விபுதி அணிந்து என் கணவர் முன் சென்று அமர்ந்தேன்.

என்னாச்சு மது, என்ன மருந்து கொடுத்தாங்க. வைரல் பீவரா என்று கேட்டார்.

இல்லை என்று சொல்லி அமைதியானேன்.

ஹாஸ்பிடல் என்று கேட்டார்.

போகலை என்றேன்.

ஏன். (அப்படியென்றால் இத்தனை நேரம் எங்கே சுற்றிக் கொண்டிருந்தாய் - அவர் கேட்வில்லை).

சுரேஷ ரூமுக்கு போயிருந்தேன்.

அவன் ரூமுக்கா. எதுக்கடி போனே. ஊர் மேயரதுக்கா - அவர் கேட்கவில்லை.

ஓ அப்படியா (என்ன விஷயமா போனே - அவர் கேட்கவில்லை).

ஏன் போனேன்னு கேட்க மாட்டீங்களா.

ஏன் கேட்கனும் மது. எதாவது வேலையா தான் போயிருப்பே.

ஏதாவது வேலையா தான் போயிருப்பேன். சரி. என்ன வேலையின்னாவது கேட்கலாமே.

எதுக்கு மது. முக்கியமான விஷயமா இருந்தா நீயே சொல்லுவே. ஒருவேளை சுரேஷ் வீட்ல ஏதாவது மருந்து இருந்தா அங்க அழைச்சிட்டு போயிருப்பான் இல்லையா.

நீங்க ஏன் இவ்வளவு நல்லவரா இருக்கீங்க.

ஹா ஹா. நல்லவரா இருக்கேன்னா. யாராலும் நல்லவரா இருக்க முடியாது. நல்லவனா பொறக்கனும் என்றார் ஏதோ பெரிய ஜோக் சொன்னது போல.

ஒரு வேளை நான் அவரோட தப்பான உறவு வச்சிருந்தா என்றேன். ஆடு களத்தை மட்டப்படுத்திவிட்டுத்தானே ஆட்டம் துவங்க முடியும்.

ஹே என்னாச்சு உனக்கு. லூஸூ. நான் உன்னை காதலிக்கிறேன். நீ என் பெண்டாட்டி. உன்னை முழுசும் நம்பறேன். அது மாதிரி சுரேஷ் என் நண்பன். அவனையும் முழுசா நம்பறேன். அது மட்டுமில்லாம தப்பு பண்ற பெண்டாட்டி புருஷன் முன்னாடி தான் போவாளா.  முட்டாள் என்றார்.

ஹய்யோ ஏன் இப்படி இருக்கீங்க. உங்களால திருப்தி அடையாம அவர் கிட்டே உறவு வச்சிக்கலாம் இல்லையா.

அடி பைத்தியம். என்கிட்டே திருப்தியடையாம தானே எப்படி சரி பண்ணனும் நீ என்கிட்டே சொன்னே. உனக்காக தானே சர்ஜரி பண்ணிகிட்டு

வந்திருக்கேன். நீ எதுக்கு எனக்கு தெரியமா தப்பு பண்ணனும். அப்படி பண்ணிட்டு நீயே ஏன் இப்போ உட்கார்ந்து சொல்லனும் எனக்கு என்றார்.

அமைதியாக இருந்தேன்.

என்னாச்சு மது ஏன் ஏதேதோ பேசறே. இன்னும் கொஞ்ச நாள்ல எல்லாம் சரியாயிடும். நான் தான் உன்னோடு விருப்பம் தெரிஞ்சிக்காம இத்தனை நாள் தப்பு பண்ணிட்டேன் என்றார்.

என் மடை உடைந்தது. அழுகை வெடித்தது. அவர் காலில் விழுந்து கதறினேன். அரற்றினேன். அவர் பொறுமையாக இருந்தார். நான் சற்றே அமைதியான பிறகு என் கைகளை பிடித்தார். என்னாச்சும்மா என்றார் மெதுவாக. அதிகம் பேசினால் நான் நொறுங்கிப்போகும் கண்ணாடி என்று நினைத்துக் கொண்டு.

நான் சொல்றதை நீங்க பொறுமையா கேட்கனும். அதுக்கப்புறம் நீங்க என்ன முடிவெடுத்தாலும் என் முழு சம்மதம் என்று முன்னுரை வைத்தேன்.

சரி என்றார்.

முதல் முறை லூலூ சூப்பர் மார்க்கெட்டில் கிரதரை சந்தித்ததிலிருந்து இன்று சுரேஷ் வீட்டில் நடந்து வரையிலும் பிறகு வீட்டில் வந்து நான் முருகனின் முன் வேண்டிக் கொண்டது வரையிலும் எல்லாவற்றையும் சொல்லி முடித்தேன்.

அவர் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தார். பிறகு மெதுவாக எழுந்து உள்ளே சென்று கால்சட்டை அணிந்தார். அறுவை சிகிச்சையினால் அவர் உள்ளாடை அணியமுடிவதில்லை. சில நாட்கள் ஓய்வு என்று மருத்துவர்

சொல்லியிருந்தாராம். உடை அறுவை சிகிச்சை செய்த இடங்களில் பட்டு எரிச்சல் உண்டாக்காதா. ஜீன்ஸ் எடுத்து அணிந்து அவர் மெதுவாக நடந்து வந்தது எனக்கு வருத்தத்தை தந்தது. கார் சாவியை எடுத்துக் கொண்டு கதவை பூட்டிவிட்டு வெளியேறினார். பிறகு பல மணி நேரம் வீடு திரும்பவில்லை.

என் குழப்பம் என்னை தின்று மென்றுக் கொண்டிருந்தது.

## 15

அன்றிரவு மிகவும் தாமதமாக வந்தார். குடித்திருப்பாரோ என்று நினைத்தேன் இல்லை. பிறகு அடுத்த சில நாட்கள் அவரிடமிருந்து எந்த பேச்சும் இல்லை. சாதாரண பேச்சு வார்த்தை கூட இல்லை.

கிரிதர் ஒரிருமுறை என்னை தொடர்பு கொள்ள முயன்றான். ஒரு முறை நானே அழைத்து நம் உறவு முற்றிலும் முடிந்தது. இனியும் தொடர்பு கொள்ள முயன்றால் என் கணவனிடம் சொல்ல வேண்டி வரும் என்று எச்சரித்தேன்.

பிறகு என்னை ஒரு நாள் மாலை சிட்டி சென்டருக்கு அழைத்துச் சென்றார் என்றார் என் கணவர். எங்கு போகிறோம் எதுக்கு போகிறோம் என்றெல்லாம் கேட்கவில்லை. வெளியே போகலாம் என்று சொன்னார் நானும் தயாரகி வைத்தேன். அங்கு ஆஷாஸ் எனும் இந்திய உணவகம் ஒன்றில் பிரத்யேகமான குடும்ப அறைக்கு அழைத்துச் சென்றார். வழியில் எதுவும் பேச வில்லை. எனக்கு விருப்பமான உணவு வகைகளை ஆர்டர் செய்தார்.

பிறகு மெதுவாக பேசினார்.

மது, நாம சில நேரம் வாழ்கையில ரொம்ப சுயநலமா யோசிக்கிறோம். நான் உனக்கு நல்ல வீடு வாசல் துணிமணி எல்லாம் வாங்கிக் கொடுத்தேனே ஒழிய நீ சந்தோஷமா இருக்கியா அப்படின்னு கேட்கலை.

நான் ஒன்றும் சொல்லாமல் கேட்டுக் கொண்டிருந்தேன். என்னிடம் சொல்வதற்கு ஒன்றும் இல்லை. எல்லாவற்றையும் கொட்டிவிட்டிருந்தேன். இனி என்ன வந்தாலும் அதை சந்திக்க தயாராக இருந்தேன். இவர் என்னை வெட்டிவிட்டாலும் கிரிதருடன் ஒட்ட வேண்டாம் என்று உறுதியாக இருந்தேன். இந்த நிகழ்வு எனக்கு இனி யாருடைய ஆலோசனையும் ஆறுதலும் வேண்டாம் என்ற ஒரு உறுதியை தந்திருந்தது.

என்னுடைய குறை எனக்கு தெரிஞ்சிருந்தும் அதுக்கு நான் எந்த வைத்தியமும் செஞ்சிக்காம இருந்ததற்கு நீ என்னை மன்னிக்கனும். அதை நீ இத்தனை மாசம் என்கிட்டே சொல்லாம இருந்ததற்கு ஹாட்ஸ் ஆஃப்.

நீ சுரேஷ் கிட்டே உதவி கேட்டு போனதே நீ இந்த திருமணத்தை காப்பாத்த எடுத்த முயற்சி தான். என் மேலே உனக்கு காதல் இல்லாம இந்த திருமணத்தை காப்பாத்த வேண்டிய அவசியும் உனக்கு இல்லை. நேரா விவாகரத்துக்கும் நீ போகலை. நடுவில கிரிதரோட நடந்த சம்பவம் ஒரு விபத்து தான். எப்ப நீ அதை என் கிட்டேர்ந்து மறைக்கலையோ அப்பவே நீ செஞ்சதுக்கு வருத்தப்படறேன்னு தெரியுது. இந்த சம்பவத்துக்காக நான் உன்னை விவாகரத்து பண்ணா கல்யாண சந்தையில் நீயும் இரண்டாம் தரம். நானும் இரண்டாம் தரம். ஆயிரம் கேள்விகள் வரும். ஆயிரம் கதைகள் உருவாகும். நம் வாழ்கையில் விவாகரத்து நீங்காத ஒரு வடுவா மாறிடும்.

கிரிதர் உன்னை கல்யாணம் செய்துக்க விருப்பம் தெரிவிச்ச பிறகு நீ அவன் பின்னாடி போகலை. அதனால உனக்கு அவன் மேல் காதல் இல்லை. உன்னுடைய பலவீனம் என்னுடைய பலவீனம். சரியான நேரத்துல அவன் அங்கிருந்தான். அந்த சம்பவம் நடந்து முடிஞ்சிடுத்து. அவ்வளவு தான்.

நாம எடுக்கப்போற முடிவுல உன் குடும்பம் என் குடும்பம் எல்லாம் பாதிக்கும். எனக்கு உன்னை ரொம்ப பிடிச்சிருக்கு. உன்னை காதலிக்கிறேன். என்கிட்டே நீ இந்த விஷயம் சொன்னதால என் காதல்ல ஏதும் மாற்றம் இல்லை. நீ என்னை காதலிக்கறே. அதுல எனக்கு சந்தேகமே இல்லை. இல்லாட்டி நாம இரண்டு பேரும் இங்கே உட்கார்ந்திருக்க மாட்டோம். ஏதாவது வக்கீல் கிட்டே கேஸ் கட்டை எடுத்துகிட்டு நாம சம்பாதிச்ச காசையெல்லாம் தண்டமாக்கிட்டு இருப்போம்.

உன்னை சந்தோஷமா வச்சிக்க வேண்டியது என் கடமை. ஆனா நீ சந்தோஷமா இல்லேன்னா அதை முதல் ஆளா நான் தான் தெரிஞ்சிக்கனும். அது என்னுடைய உரிமை. அது உன்கிட்டே என் கோரிக்கை. சரியா என்றார்.

பொறுமையாக கேட்டுக் கொண்டிருந்த என் கண்களில் நீர் வழிந்தது.

இன்னொரு விஷயம். நான் இப்போ ஆரோக்கியமா இருக்கேன். அந்த ஒரு சின்ன குறையையும் மருத்துவத்தால குணமாக்கிடுவேன். ஆனா எதிர்காலத்துல ஒரு கார் விபத்துல என் காலே போயிடுத்து அப்ப என்னால உறவே வச்சிக்கமுடியாதுன்னு நிலை வந்தா என்ன பண்ணுவே என்று கேட்டார்.

நான் அவர் பக்கம் வந்து அமர்ந்து அவர் வாயை என் விரல்களால் பொத்தினேன். பிறகு அவரை அணைத்தேன். அவர் காதுகளில் மெதுவாக கல்லானாலும் கணவன் என்று சொல்லி கன்னத்தில் முத்தமிட்டேன்.

ஹேய் இது அரபு நாடும்மா. லண்டன் இல்லை. ப்ப்ளிக்கில் முத்தம் கொடுத்தா ஜெயில் தான் என்றார். அவர் கன்னத்தை காட்டி இது என்னுடைய பிரைவேட். அப்படியே ஜெயில்ல போட்டா ரெண்டு பேரை சேத்து போடச் சொல்லுங்க என்றேன். நீங்க சூப்பர் மேன் தான் ஒத்துக்கறேன். ஆனா எதுக்காக மூணு நாள் பேசாம இருந்தீங்க. நான் என்ன பாடுபட்டு போனேன்னு தெரியுமா என்று கேட்டேன்.

நான் சூப்பர் மேன் இல்லை, மது. அதனால தான் மூணு நாள் எடுத்துக்கிட்டேன். நான் ஒரு சராசரி மனிதன். ஆனால் நாம் எடுக்கப்போற முடிவு பல பேரை பாதிக்கும். நல்ல தீர்க்கமா யோசிச்சு தான் எடுக்கனும். பட்பட்டுன்னு முடிவு எடுக்கறதாலே தான் பல பேர் வாழ்கை நாசமாயிடுது. எடுக்கப்போற முடிவு எப்போதுமே சுபமாக தான் இருக்கனும். சுபம் தானே? என்று கேட்டார்.

சுபம் சுபம் என்று சொல்லி அவர் தோளில் சாய்ந்தேன்.

முற்றும்

# மோகனின் பிற படைப்புகள்

1. மேற்கே செல்லும் விமானம் - பாகம் 1 - 4
2. கடைசி பேட்டி
3. கணினிக் காதல்
4. மெல்லக் கொல்வேன்
5. போதாதெனும் மனம்
6. என் கை பிடித்தவன்
7. கறுப்பு வரலாறு
8. ரிதுவேந்தர்
9. காணாமல் போன பக்கங்கள்
10. இன்னும் பெயர் வைக்கவில்லை
11. ஞானி சிறுகதை தொகுப்பு - நான்கு பாகங்கள்
    - ஞானி
    - ஞானி - 2
    - மீண்டும் ஞானி
    - ஞானியும் சோனியும்

இவற்றை நீங்கள் http://www.etheni.com எனும் தளத்திலோ அல்லது http://tamilamudhu.blogpsot.com எனும் வலைப்பூவிலோ காணலாம்.

கதைகளை படித்துவிட்டு உங்கள் கருத்துக்களை maakimo@gmail.com எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள்.

* * *